உ

அச்சுவேலி

# சரஸ்வதி வித்தியாசாலை



# பவளவிழா மலர்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை பவள விழாவும்
ஞானபண்டிதன் — நல்லறிவந்தணாளன்
சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்களின்
சிலை திறப்பு விழாவும்
சிறப்புற நன்றே என்று வாழ்த்துகிறோம்.

# கங்கா

## பல்பொருள் அங்காடி

பஸ் நிலையம்,
அச்சுவேலி

உ
கணபதி துணை

அச்சுவேலி

சரஸ்வதி வித்தியாசாலை

# பவளவிழா மலர்

★

வித்தியாசாலை நிறுவனர்
அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள்
சிலை திறப்புவிழாச் சிறப்பு மலரும்

★

*J./Atchuvely*
*Saraswathy Vidhyalayam*
*75-th Anniversary*
*(1918 – 1993)*

*22, April 1994*

வெளியீடு :

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
பழைய மாணவர் சங்கம்

ஒத்துழைப்பு : பாடசாலை அபிவிருத்திச் சங்கம் / சபையும்

மலர் வெளியீட்டுக்குழு :

திருமதி சகுந்தலாதேவி கனகராசா (அதிபர்)
வில்லிசைப் புலவர் திரு க. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி)
திருமதி க. இராசலிங்கம் *B. A. Dip. Ed*
திரு ஆ. லோகேஸ்வரன் (ஆசிரியர்)
திரு ம. கணபதிப்பிள்ளை

தொகுப்பாசிரியர் :

வில்லிசைப் புலவர் திரு க. நா. கணபதிப்பிள்ளை

அச்சுப்பதிப்பு ;
ஸ்ரீ வாணி அச்சகம் உடுப்பிட்டி.

உ

# பவளவிழா மலர்

## யாழ்/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை

( நிறுவுனர் )

**1918**

**1993**



சிவசிறி ச. குமாரசாமிக்குருக்கள்
அச்சுவேலி

### காணிக்கை

சைவம் வளரத் தமிழ் வளரத்
தருமம் ஓங்கித் தழைத்துவரப்
பொய்யைப் போக்கி மெய்கண்ட
புனித ஞானி யாமெங்கள்
ஐயகு மாரசாமி மறைஞானன்
அடியிற் பவள விழாமலரை
வையம் புகழும் காணிக்கையாய்
வைக்கோம் நாமும் வாழ்கவே!

உ

# பாடசாலைக் கீதம்

அச்சுவேலி மெச்சும் புகழ்உயர் சீர்
சரஸ்வதி வித்தியாலயம் வாழ்க
அன்னை மொழியைப் பொன்னெனப் போற்றி
ஆண்ட சைவமும் அகிலமும்பரவ
(அச்சுவேலி மெச்சும்)

நாவலர் பெருமான் நவின்றனல் உரையை
குருக்கள் பெருமான் குமார சாமியால்
நிலைபேர் பெற்றதை நாம் நன்கறிவோம்
குருக்கள் ஐயா ஞாபகசின்னமாய்
(அச்சுவேலி மெச்சும்)

நான்முக நாவில் படரும்பாரதி; பாரதி நாவில்
படரும் கலைகள்; கலைகள் வளரும் கோவிலுமாகி
கலைகொள் மக்களை ஆக்கித்தந்த
(அச்சுவேலி மெச்சும்)

அன்பை பெருக்கி அறிவைப் பரப்பி ஆண்ட
அறிஞ்ஞனை அவனிக்குத் தந்த நாவலர் பாவலர்
பரம்பரை தந்த என்றும் விளங்கவேண்கின்றோம்
(அச்சுவேலி மெச்சும்)

ஆசிரியர் மாணவர் அன்புடையோராய்
அகிலம் விளங்கும் பண்புடையோராய்
ஆல் போல் கிளைத்த அறிவுடையோராய்
அவனியில் விளங்க வேண்டுகின்றோமே.
(அச்சுவேலி மெச்சும்)

## பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள்

திருமதி சகுந்தலாதேவி கனகராசா (அதிபர்) - தலைவர்
திரு. சி. தங்கவேலு - பிரதி அதிபர்
திரு. சி. இரத்தினசிங்கம் - செயலாளர்
திரு. எம். ஜீ. சேவியர்
திருமதி க. இராசலிங்கம் - பொருளாளர்
திரு. நா. நாகராசா
திரு. மா. தங்கவேலு
திரு. வ. சின்னராசா
திரு. கு. ரவிச்சந்திரன்
திரு. இ. யோகநாதன்
திரு. க. நா. கணபதிப்பிள்ளை (நலன் விரும்பி)
(சின்னமணி)

## பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்

திருமதி ச. கனகராசா (அதிபர்) - தலைவர்
திரு. நா. சந்திரபோஸ் - செயலாளர்
திருமதி க. இராசலிங்கம் - பொருளாளர்
திருமதி பா. விமலராணி
திருமதி செ. சரஸ்வதி
திரு. K. அருளானந்தம்
திரு. எம். ஜீ. சேவியர்
திரு. நீ. முருகேசு
திரு. வி. கணேசமூர்த்தி
திரு. வை. பாலசுந்தரம்
திரு. க. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி)
திரு. சி. தங்கவேல்

## பழைய மாணவர் சங்க செயற்குழு — 1994

| | |
|---|---|
| திரு. வி. கணேசமூர்த்தி | ( தலைவர் ) |
| செல்வன் வே. தனேஷ்குமார் | ( உப தலைவர் ) |
| திரு நா. உமாசங்கர் | ( செயலாளர் ) |
| செல்வி வ. சுபாஜினி | ( உப செயலாளர் ) |
| செல்வன் கி. வரதராஜா | ( பொருளாளர் ) |

## ஆலோசகர்கள்

திரு. ஆ. க. கந்தையா    சிவஸ்ரீ வை. விருத்தகிரீஸ்வரக் குருக்கள்

## கணக்காய்வாளர்கள்


திரு. ஆ. சோமசுந்தரம்    திரு. ஆ. லோகேஸ்வரன்
திரு. அ. கேசவமூர்த்தி

## நிர்வாக சபை உறுப்பினர்கள்

| | |
|---|---|
| செல்வன் இ. பாபுராஜ் | செல்வி க. யோகேஸ்வரி |
| செல்வன் க. தயானந்தம் | செல்வி ச. ராதிகா |
| செல்வன் கு. ரவிச்சந்திரன் | செல்வி. ச. சாந்தினி |
| செல்வன் த. சிவகுமார் | திரு. மா. தங்கவேலு |
| செல்வன் தெ. பாஸ்கரன் | திரு. ம. கணபதிப்பிள்ளை |

# யாழ்/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை

## பவளவிழா மலர்



பாடசாலை அபிவிருத்தி சபை
உறுப்பினர்கள்
1994



பாடசாலை பழையமாணவர் சங்கம்
உறுப்பினர்கள்
1994



உலவிற்குளம், சித்திவிநாயகர் ஆலய
பிரதிஷ்டா குருவும், குருக்கள் ஐயாவின்
மகன்வழிப் பேரனுமான
சிவஸ்ரீ. கனகசபாபதிக் குருக்கள்

உ



அச்சுவேலி

## உலவிற்குளம் சித்திவிநாயகன்

# திருவடி சிந்தை வைப்போம்

ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே சுடராகி
நீங்கா விநாயகனாம் நின்மலனைக் கைதொழுவோம்.

ஆங்காரம் நீங்கும் அகத்தார் உளக்கோயில்
பாங்காக நிற்கின்ற பண்ணவனைத் தாள்தொழுவோம்.

கோடொடித்துப் பாரதத்தைக் கோவரையி லேஎழுதி
மூடிகத்தில் ஊர்ந்துவரும் மூர்த்தியினைப் பாடுவமே.

அங்குசமோர் செங்கை அடர்பாசம் மற்றொருகை
இங்கிதமாய் ஏந்துகின்ற ஏரம்ப னைப்பணிவோம்,

அஞ்சலென்ற கையும் அருள்பூத்த செங்கரமும்
தஞ்சமென்று காட்டும் தயாபரனைப் போற்றுவமே.

சித்திபுத்தி யாருடனே சீருலவிக் குளமுறையும்
சித்திவிநா யகன்றன் சேவடியைச் சிந்தைவைப்போம்.

மூலாதா ரக்கமலம் மூண்டஎழி லாலயத்தின்
மேலாரும் ஆனைமுக விக்கினனை ஏத்துவமே.

காலிற் சிலம்புகொஞ்சக் கையிற் கடகமின்னக்
கோலம் கவினும் குழக்கன்றைப் பாடுவமே.

— சின்னமணி —

ள—

# பிள்ளையார்சுழி போட்டுத் தொடங்கு...!

''எப்போ தகத்தும் நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்''

அருட்பெருஞ் சோதியாகிய சிவ சோதியிலிருந்து மூலப் பிரகிருதியாகிய மாயையென்னும் கரிய கோணத்தில் அறிவற்றுக் கிடந்த எண்ணில் கோடி உயிர்கட்கு அருளும் பொருட்டு தனிப்பெருங் கருணையாகிய பராசக்தி தோன்றியது; அதினின்றும் ஆதிசக்தி தோன்றியது: அதினின்றும் ஞானசக்தியும் — அதினின்று கிரியாசக்தியும் — அதினின்று இச்சா சக்தியும் தோன்றின. அந்த இச்சா சக்தி விந்து என்ற சுத்தமாயையின் பாய்ந்தது. அதன் ஆற்றலைத் தாங்கமாட்டாத விந்து சுழன்றது. அதினின்றும் நாதம் தோன்றியது. விந்து சுழியாகவும் நாதம் நீண்ட கோடாகவும் காட்சியளித்தது. அதுதான் நம் முன்னோர்கள் எழுதத் தொடங்குமுன் முதலில் எழுதுகின்ற ''உ'' என்ற பிள்ளையார் சுழி. பிள்ளையார் முதற்கடவுள், இது முதலில் எழுதும் விந்து நாதக்குறி. ஆதலால் பிள்ளையார் சுழி எனப் பெயர் பெற்றது.

ஒலிவடிவமும் வரிவடிவமும் சேர்ந்து எழுத்தாகின்றது, ஒலி வடிவைக் குறிப்பது வட்டம் (''O''), வரிவடிவைக் குறிப்பது கோடு (''—'') இந்த இரண்டும் சேர்ந்ததே பிள்ளையார் சுழி என்பது ஒரு கருத்து. ''நாத விந்துக லாதி நமோ நம'' என்பது அருணகிரியார் வாக்கு.

கருத்துக்கள் பலவாயினும் எழுத்துப்பணி தடையின்றி முடிய ''கடவுளை வேண்டி'' அஃதாவது சக்தியையும் சிவனையும் வேண்டி இடப்படும் குறியே ''பிள்ளையார் சுழி'' என எண்ணி இம்மலர்ப் பணியைத் தொடங்குவோம்.

''அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற் றற்பிறந்த
தொல்லைபோம் போகாத்துயரம்போம் — நல்ல
குணமதிகமாம் அருணைக் கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்''

விவேகசிந்தாமணி

உ

# மலரை நுகருமுன்.........!

இலங்கையில் அச்சு வேலி
எனும்பதி விளங்க வந்தான்;
துலங்குறு குமார சாமிக்
குருக்களாம் தூய பேரோன்;
மலங்கெடச் சிவத்தைப் பேணி
வயங்குறு பூசை யாற்றி
நலங்கிளர் தாவே வாழும்
நாயகன்: இனிய னாவான்.

இவ்வாறு பேரறிஞர் கி. வா, ஜெகந்நாதன் அவர்கள் போன்ற அறிஞர் பெருமக்களால் போற்றி ஏற்றம் பெற்ற அச்சுவேலி சிவஸ்ரீ ச, குமாரசாமிக் குருக்கள் அவர்களால் இற்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பட்ட ( 1918 ம் ஆண்டு காலயுத்தி வருஷத்துச் சித்திரைத்திங்கள் புனர்பூச நட்சத்திர நன்நாளில் ) வித்தியாலயம் தான் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை.

'' சமய அடிப்படையிற் கல்வி கற்றலே ஒருவருக்கு மேன்மை தரும் '' என்ற கொள்கையுடைய நாவலர் பெருமானின் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டே குருக்கள் ஐயா அவர்கள் இப்பாடசாலையை நிறுவினார்.

இவ்வித்தியாசாலை தனது வியத்தகு சேவையில் 1993 ம் ஆண்டு — 75 ஆண்டுகளை நிறைவு செய்தது. எழுபத்திஐந்து ஆண்டு நிறைவினையும் நிறுவனர் நினைவினையும் ஒருங்குசேரக் கொண்டாடுவதென முன்னைய அதிபரும் பாடசாலை அபிவிருத்தி சங்கமும் பெருமுயற்சி எடுத்தது. ஆனால் நாட்டு நிலமை இடந்தராத காரணத்தால் நிறுவனர் நினைவு தினத்தை மட்டும் கொண்டாடிச் சிறப்புப் பெற்றது.

தற்போதய அதிபர், உப அதிபர், பகுதி அதிபர், ஆசிரியர்கள் ஒத்துழைப்புடன் இவ் வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம் பவளவிழாவையும், பவளவிழா மலர் வெளியீட்டினையும் சிறப்புற நடத்தமுன்வந்தது பாராட்டுதற்குரியதாகும். காலம் தாழ்த்தியே விழா நடைபெற்றாலும் இவ் வித்தியாசாலையின் '' பவளவிழா மலர் '' இன்று 22 - 04 - 94 வெள்ளிக்கிழமை உங்கள் கைகளிலே .. மகிழ்ச்சிதானே !!

பவளவிழாவுடன் இவ்வித்தியாசாலையை நிறுவிய வித்தியாகுருவாகவும், உலவிற்குளம் சித்தி விநாயகர் ஆலயக் குருமகானாகவிருந்து பிரதிஷ்டாகுரு, தீஷாகுருவாகவும் மிளிர்ந்த ஸ்ரீலஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்களவர்கட்கு நினைவுச் சிலை நிறுவி அதை இன்று திறந்துவைக்கவும் அதிபர், ஆசிரியர்களும், அபிவிருத்திச்சபை, அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர் சங்கம் ஆகியன ஏற்பாடு செய்தமை குருக்களுக்குச் செய்யும் நன்றிக்கடனன்றோ !!

இவ்விழா மலருக்கும், குருக்களின் சிலை நிறுவுவதற்கும் இவ்வூர் மக்கள் பெருநிதி தந்துதவியமை மறக்க முடியாத நன்றியாகும். கால சூழலையும் பொருட்படுத்தாது வாழ்த்து விளம்பரம் தந்துதவிய வர்த்தக நிலையம் அனைத்திற்கும் இம்மலருக்கு ஆசிச் செய்திகள் தந்த கல்விப்பணிமனை அதிகாரிகட்கும், தமிழறிஞர்கட்கும், அந்தணோத்தம அறிஞர்கட்கும், கட்டுரை கவிதை தந்து சிறப்பித்த கல்விமான்களுக்கும் நன்றியும் கடமையும் சொல்கின்றோம்.

சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் ஐயாவின் திருஉருவச் சிலையை உயிர்வடிவமாக வடித்துத் தந்த கொக்குவில் இந்துக்கல்லூரி சித்திர ஆசிரியர், சிற்ப ஓவிய விற்பன்னர் திரு ச. துரைவீரசிங்கம் ( சிங்கி ) ஊரெழு அவர்கட்கும் என்றும் எமது நன்றிகள்.

இம்மலரைப் பல சிரமங்களின் மத்தியில் குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டுத்தந்துதவிய உடுப்பிட்டி ஸ்ரீ வாணி அச்சகத்தார்க்கும் எம் நன்றி.

மொத்தத்தில் இம் மலர் மணக்கச் சம்பந்தப்பட்ட அனைவர்க்கும் எம்மனப்பூர்வமான நன்றி உரியதாகுக !!

நல்வழி எமை ஈடுபடுத்தி அருள்மழை பொழியும் உலவிற்குளம் சித்திவிநாயகன் திருவடிகளை மனதில் இருத்திப் பிரார்த்தனை செய்வோமாக !!

சரஸ்வதி வித்தியாசாலை, அச்சுவேலி.

**மலர் வெளியீட்டுக் குழுவினர்**

உ

# சிவஸ்ரீ வை. கனகசபாபதிக் குருக்கள்

அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

"யாவினும் புண்ணியம்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்று பாரதியார் பாடினார். "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்பது முதுமொழி. கல்விப்பணியூட்டும் கல்வி நிலையங்கள் தெய்வசந்நிதானங்களுக்குச் சமமாக மதிக்கப்படவேண்டியவை.

அந்தவகையில் அச்சுவேலிவாழ் மக்களுக்கு அறிவு வழங்கும் சரஸ்வதி வித்தியாலயம் இன்று பவளவிழாக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

அதுமட்டுமல்லாமல் கல்லூரியின் ஸ்தாபகர் குமாரசாமிக் குருக்களுக்கும் விழா எடுப்பது பெருமைக்குரிய ஒன்று. மறைந்த பெரியவர்களை நினைவுகூர்ந்து அவர்களது சேவையைப் போற்றுவதும், வளர்ந்துவரும் நிறுவனங்களை வாழ்த்தி விழா எடுப்பதும் அவசியமானவையே.

சரஸ்வதி வித்தியாலய பழைய மாணவர்கள் இவ்விரு நிகழ்வையும் ஒருசேர நடத்தி மலர் ஒன்றையும் வெளியிட முன்வந்திருப்பது அவர்களின் உயர்ந்த பண்பைக் காட்டுகிறது. அவர்களுக்கு எனது நல்லாசிகளைத் தெரிவிக்கிறேன்.

இப்பிரதேசத்தை பொறுத்தவரை சரஸ்வதி வித்தியாலயமும், அது தோற்றம் பெற்ற காலகட்டமும், சூழ்நிலையும் மிக முக்கியமானவை. எனது பாட்டனாராகிய சிவஸ்ரீ ச குமாரசாமிக் குருக்கள் அவர்கள் காலத்தின் தேவை கருதி இப்பாடசாலையை உருவாக்கியமையும் அவரது பன்முகப்பட்ட சமய, கல்விப்பணிகளும் இன்றைய தலைமுறையினர் பலரும் அறியாதன. இம்மலர் அந்த இடைவெளியை நிரப்புமென நம்புகிறேன்.

விழாவும், மலர் வெளியீடும் சிறந்து விளங்கவும் அனைவரும் நல்வாழ்வு பெறவும் விநாயகர் பாதங்களை வணங்கி ஆசிகூறி அமைகிறேன்.

★

உ

# பவளவிழா மலர்

# யாழ்/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை



அதிபர்

திருமதி. சகுந்தலாதேவி கனகராசா



பிரதி அதிபர்

திரு. சி. தங்கவேல்



பகுதித் தலைவர்

திருமதி. க. இராசலிங்கம்

1994

உ

# அதிபரின் எண்ணத்தில்........

சைவத் தமிழ் மக்களின் இரு கண்களாகிய சைவமும் தமிழும் அந்நியர் ஆட்சிக் காலத்தில் மதமாற்றத்தாலும் மொழித்திணிப்பாலும் சோர்வடைந்த காலையில் அதற்குச் சவாலாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட மத மொழிப் பிரசாரப்பணியின் சிறுபங்கையாவது தான் தொடர்ந்தார் அச்சுவேலி சிவஸ்ரீ குமரசுவாமிக்குருக்கள் ஐயா அவர்கள். அதன் ஓர் அங்கமாக ஆரம்பிக்கபட்டதுதான் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை 1918 ம் ஆண்டு சித்திரை மாதம் அவரின் ஜனன நட்சத்திரமான புனர்பூச நட்சத்திரத்தில் உலவிற்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தின் மேற்கு வீதியை முகப்பாகக் கொண்டு சிறிய கட்டடத்தோடு ஆரம்பிக்கப்பட்டதான இப்பாடசாலை அதிதுரித வேகத்தில் வளர்ச்சியடைந்து கூட்டுத்தாபனத் தலைவர் போன்ற மிகப் பெரிய பதவிகளை வகிக்கும் புத்தி ஜீவிகளை உருவாக்கிக் கொண்டிருந்தது.

அரசாங்கம் தனியார் பாடசாலைகளைப் பொறுப்பேற்கத் தொடங்கி ஓரிரு ஆண்டுகளின் பின் பட்டணத்துப் பாடசாலைகளின் மோகத்தால் உந்தப்பட்டு மாணவர்கள் தாம் விரும்பிய பாடசாலைகளைத் தேர்ந்தெடுக்கலாம் என்ற உரிமையைப் பயன்படுத்தி பெற்றோர் தம் பிள்ளைகளை பட்டணத்துப் பாடசாலைகளுக்கும் அயற்கிராமங்களிலுள்ள முதன்மைப் பாடசாலைகளுக்கும் அனுப்ப முற்பட்டதால் இப்பாடசாலையின் முன்னேற்றமும் கல்வித்தரமும் சற்றுத் தொய்வு நிலமையையெட்டியிருந்த போதிலும் அண்மைக் காலம் தொட்டு படிப்படியாக முன்னேற்றமடைந்து பரிணமித்துப் பவளவிழாக் காணும் பேற்றினைப் பெற்றுள்ளமை போற்றுதற்குரியதாகும். இப்பாடசாலை தனது நூற்றாண்டு விழாக்காணும் முன் ஒரு மகாவித்தியாலயமாக மாறுவதற்கு வாய்ப்புள்ளது இதற்காக உலவிற்குளச் சித்தி விநாயகர் பல்லோராலும் இறைஞ்சப்படுகிறார்.

இன்று எமது பாடசாலையின் பவளவிழாக் கொண்டாடும் சம காலத்தில் இதன் நிறுவனரான சிவஸ்ரீ குமாரசுவாமிக்குருக்கள் ஐயா அவர்களுக்கு நன்றிக் கடனாக எமது பாடசாலையில் சிலை நிறுவிக் கௌரவிப்பதும் சாலப் பொருத்தமான கைங்கரியமாகும். தண்ணெனிடமிக்க தருநிழலாக அச்சுவேலியின் மதநியின் கோவிற் பிரகாரத்தையும் மருத நிலத்தை அண்டிய தென்னஞ்சோலைகளையும் பண்பு சால் நன்மக்களைக் கொண்ட குடியிருப்புக்களையும் ஒருங்கிணைந்த சூழலில் அமைந்துள்ள சரஸ்வதி வித்தியாசாலை தனது வியத்தகு சேவையில் 1993 ம் ஆண்டு சித்திரை மாதம் 13 ம் திகதி தனது எழுபத்தைந்தாவது வருட சேவையை நிறைவு செய்திருந்த போதும் பவளவிழாவும் ஸ்தாபகர் சிலை நிறுவலும் பாடசாலைப் பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் ஒருங்கே நடைபெறுவதற்காக இவ்வருடம் விழாவெடுக்கப்படுகிறது.

எனது சேவைக் காலத்தில் இப்பெருவிழாவை நடாத்த முன் வந்த பாடசாலை பழைய மாணவர்களையும் அவர்களுக்கு உறுதுணையாக தோளோடு தோள் நின்று ஊக்கமும் ஆக்கமும் அளித்த பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தவர்கள் / சபையோர் ஆகியோரையும் ஆசிரியர் மாணவர்களையும் நலன் விரும்பிகளையும் பண்பு சால் கிராமத்தவர்களையும் பெற்றோரையும் நிதியுதவியவர்களையும் மலரின் விளம்பரதாரர்களையும் / மலருக்கு விடய தானம் கொடுத்தவர்களையும் விழாக் குழுவினரையும் மலர்க்குழுவினரையும் விழாமலரை சிறப்புற அமைத்துக் கொடுத்த எனது மாணவரான உடுப்பிட்டி ஸ்ரீ வாணி அச்சக உரிமையாளரையும் மருதன் ஓட்டப் போட்டி விளையாட்டுப் போட்டி நாடகப் போட்டி போன்ற இன்னோரன்ன துறைகளில் பங்கு கொண்டவர்களையும் குருக்கள் குடும்பத்தவர்களையும் மனதார வாழ்த்தி என் இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'

என்றாங்கு இந்த நல்லதொரு பணியை செய்து முடிக்கவேண்டியே உலவிற்குளத்தான் என்னை இங்கு சேவைக்கு அழைப்பித்தான் என எண்ணிப் பெருமிதமடைகிறேன். வெற்றிப்பாதையில் வீறுநடை போடும் எமது சரஸ்வதி வித்தியாசாலை மென்மேலும் சகல துறைகளிலும் வளர்ச்சி பெற்று மேலோங்க யாழ் வித்தியா பகுதியினரோடு சேவை மனப்பாங்குடன் கூடிய அன்புள்ளம் கொண்ட பொதுமக்கள் சார்பாக விக்கினம் நீக்கும் விநாயகப் பெருமானை வேண்டுகிறேன்.

— திருமதி சகுந்தலாதேவி - கனகராசா
அதிபர்

# சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்களின் பங்கு

— கோப்பாய் சிவம் —

இந்துக்களின் வழிபாட்டு மரபிலே ஆலயங்கள், உருவ வழிபாடு, கிரியைகள் என்பன மிக முக்கயத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. வேத உபநிடதங்களின் தத்துவார்த்த சிந்தனைகளும், வழிபாட்டு முறைகளும் இதிகாச புராணங்களில் மக்கள் வாழ்க்கைக்கேற்ப நடைமுறைப் படுத்தப்பட்டு ஆகமங்களில் செழுமையான கட்டமைப்பைப் பெற்றன எனலாம்.

சைவசமய நெறிமுறை தனித்துவமாகத் தென்னாட்டிலும் ஈழத்திலும் மலர்ச்சி பெற்றுப் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வருகின்ற போதும் சிறப்பான இருவேறுபட்ட இருமை அம்சங்கள் இணைந்து வளம்பெற்றன. ஒன்று, சமயநெறிமுறை — தத்துவ நெறிமுறை ஆகிய இரண்டும் இணைந்த தன்மை. மற்றது வேதமரபு — ஆகமமரபு என்ற இரண்டும் இணைந்த தன்மை.

சடங்குகள், சம்பிரதாயங்கள், கிரிகைகள், வழிபாடுகள் என்று சாதாரண மக்களால் தினமும் கைக்கொள்ளப்பட்டு வரும் சமய நெறிமுறை அம்சங்களிலிருந்து சற்றும் பிரியாமல் அவற்றோடு இரண்டறக் கலந்து தத்துவ சிந்தனைகளும் பொலிவுறுவது இந்து சமயத்தின் சிறப்பம்சமாகப் பலராலும் போற்றப்படுகிறது.

எமது சிறப்புப் பிரமாணமான ஆகமங்களில் இப்பண்பின் அடிப்படையைக் காணலாம். சரியை, கிரியை யோகம், ஞானம் ஆகிய நான்கு பாதங்களாகப் பிரிக்கப்பட்டு நால்வகை மார்க்கங்களைப் போதிக்கும் சிவாகமங்களில் சரியை, கிரியை என்பன சமய நெறிமுறையைக் கூறுபவையாகவும் யோகம், ஞானம் என்பன தத்துவ சிந்தனைகளை விளக்குபவையாகவும் இருக்கின்றன என்று ஒருவகையில் கொள்ளலாம்.

சிவாகமங்களின் தத்துவ உட்பொருள்கள் திருமந்திரத் தோத்திர நூல் வாயிலாகவும் சைவசித்தாந்த சாத்திர நூல்கள் வாயிலாகவும் தமிழில் எழுந்து நிலைபெற்றன. சமய நெறிமுறையில் முக்கிய பங்கு வகிக்கும் கிரியைகள் பத்ததிகளாக விளக்கம் பெற்று இன்னும ஆலயங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. உண்மையில் மிகப் பெரிய ஆகமப் பரப்பில் இன்று நமக்குப் பெரிதும் எஞ்சியிருப்பது கிரியா பாகங்களே எனலாம். இதற்கு காரணம் கிரியைகளை நாம் தொடர்ந்து பேணிவந்தமையே.

சிவாகமங்களில் சுருக்கமாகவும் பூடகமாகவும் கூறப்பட்ட கிரியை முறைகளைத் தெளிவுபடுத்தி சோமசம்பு சிவாசாரியார், அகோரசிவாசாரியார் முதலான பெரியோர்கள் விரிவான பத்ததிகளைத் தொகுத்து வழங்கினார்கள்.

மகோற்சவம், ப்ரதிஷ்டை முதலிய கிரியைகள் நடைபெறும் போது கிரியைகளை ஒழுங்குற வரிசைப்படுத்தியும் அவற்றின் நடைமுறைகளையும் அந்தந்த நேரங்களில் சொல்லவேண்டிய மந்திரங்களையும இத்த பத்ததிகள் எடுத்துக் கூறுகின்றன. சாதகாசாரியார் என்பவர் இந்தப் பத்ததியை வாசிக்க அதற்கிணங்க சிவாசாரியார் கிரியைகளை நடத்துவார்.

இந்துப் பாரம்பரியத்தின் இரண்டாவது சிறப்பம்சமான இருமை அம்சம் வேத - ஆகம இணைவு வேள்விகளும் பிரார்த்தனைகளுமாக அக்கினியை முதன்மைப்படுத்திய வேத மரபும், ஆலய அமைப்பு, உருவ வழிபாடு ஆகியவற்றைக் கொண்ட ஆகமமரபும் இணைந்த ஒரு முறையாகத் தென்னாட்டில் பல்லவர் காலத்தில் உருவாக்கப்பட்ட பத்தியோடிணைந்த கிரியை முறை வளம்பெற்றது. இந்த அடிப்படையும் பத்ததிகளில் நாம் காணலாம்.

கிரியா பத்ததிகள் தோற்றம் பெற்ற பின் சில சங்கடங்களும் உண்டாயின. உபநிடதக்கருத்துக்களில் மேலோட்டமான சில முரண்பாடுகள் காணப்பட அவற்றைத் தெளிவுபடுத்தி பாதராயணர் என்பவர் பிரமசூத்திரத்தை உருவாக்கியமையும் பின்னர் பல்வேறு அறிஞர்கள் தத்தமது அறிவுக் கெட்டியவாறு வியாக்கியானங்கள் எழுதியமையும் இங்கு ஒப்பிடத்தக்கது.

இதேபோலவே வேறுபட்ட பலவேறு பத்ததிகளை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு ஆலயங்களிலும் கிரியைகள் நடைபெற்ற போது சிலசில முரண்பாடுகள் தோன்றின. இம்முரண்பாடுகள் உண்மையில் மேம்போக்கானவை என்பது மனங்கொள்ளத் தக்கது. அடிப்படையான தத்துவார்த்த உண்மைகளிலோ ஆன்மீக விடுதலைக்கான கிரியா மார்க்க நடைமுறை என்ற இலட்சியத்திலோ முரண்பட்டதாகக் கொள்ள இடமில்லை.

இனி இந்த பத்ததிகள் இலகுவாகக் கையாளத் தக்க முறையில் அமைந்திருக்கவில்லை. விதிமுறைகள், பிரயோகங்கள், உரை, சுலோகம் என்பன எல்லாம் வேறுபடுத்தித் தெளிவாக அச்சேற்றப்பட்டு எல்லோருடைய கையிலும் இருக்கக் கூடிய நிலமை தோன்றியிருக்கவில்லை.

இந்த நிலமையில் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்கள பல்வேறு பத்ததிகளையும் ஆராய்ந்து முரண்பாடுகளைக் களைந்து தெளிவான முறையில் தனித்தனி பத்ததிகளை உருவாக்கி வெளியிட்டார்.

இந்த பத்ததிகள் வெளி வந்தமையால் இலகுவாக யாவரும் இவற்றினடிப்படையில் கிரியைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். ஓரளவு சீரான பொதுமைப்பட்ட கிரியை முறைகள் எல்லா ஆலயங்களிலும் பேணப்படவும் குருக்களவர்கள் காலாயிருந்தார் என்று கூறலாம்

தென்னகத்திலும் கூட இவருடைய பத்ததிகளுக்கு நன்மதிப்புண்டு அங்குள்ள சில வேதாகம பாடசாலைகளில் இவருடைய பத்ததிகளைப் பாடநூலாக வைத்துள்ளனர் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

உ

கோப்பாய், பிரதேச செயலர்

திரு. க. கேதீஸ்வரன் அவர்கள் வழங்கிய

## பவள விழா மலருக்கான

# ஆசியுரை

அந்நிய ஆட்சியின் கெடுபிடிகளில் இருந்து சைவத்தையும், தமிழையும் காப்பாற்றிய நாவலர் மரபின் முன்னோடிகளில் ஒருவராக இருந்து அவர் வழியில் சரஸ்வதி வித்தியாசாலையை 1918 ல் ஆரம்பித்து அதன் முகாமையாளராகவும் பல்லாண்டுகள் இருந்து சிறப்புப்பணியாற்றிய சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், நாவலரை இந்தியத்தமிழகம் போற்றுகின்ற துறையின்றும் மாறுபட்ட ஒரு கோணத்தில் தற்போதும் போற்றுவது ஈழத்துச் சைவ உலகத்திற்கு பெருமை சேர்ப்பதாகும்.

பதினான்கு நூல்களுக்கு மேல் சைவாகமங்களைப் பற்றி எளிதில் எவரும் விளங்கிக்கொள்ளும் வகையில் எழுதி வெளியிட்ட குருக்களின் பெருமுயற்சி தமிழகச் சைவாகம உலகில் இன்றும் போற்றப்படுகின்றது. இன் நூல்களுக்கு இருக்கும் கிராக்கியை அவரது வாரிசுகள் தீர்த்து வைக்க வேண்டுமென்பது எனது பேரவாவாகும்.

அச்சுவேலி கிராமத்தில் அவரால் எழுப்பப்பட்ட சரஸ்வதி வித்தியாசாலை தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய அரண். அன்னாரது சேவை நினைந்து நினைந்து பாராட்டக்கூடியது. அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் துணிந்து போர்க்கொடி ஏந்திய செம்மல்கள் வரிசையில் குருக்களும் இப்பாடசாலையும இடம் பெற்று விட்டன என்பதை அறிந்து மகிழ்வெய்துகிறேன்.

இவ்வித்தியாசாலை பவளவிழா மலர் வெளியிடுவதையும் அப்பெருமகனுக்கு சிலை எழுப்புவதையும் பாராட்டுவதோடு அன்னாரது புனிதமான நோக்கம் நிறைவேற எல்லாம் இறைவன் அருள்பாலிக்க வேண்டுமென ஆசிவழங்கி அமைகின்றேன்.

க. கேதீஸ்வரன்

பிரதேச செயலர் / மே. அ. அ

கோப்பாய்.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவி,
துர்க்கா துரந்தரி,

## தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

## சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் ஐயா

" கரிய மாலினும் கண்ணுத லானினும்
உரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமோர் ஐந்தினும் மெய்யினும்
பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தர் "

— கம்ப இராமாயணம்

அந்தண சிரேட்டராயும் ஞானதாக முடையவராயும் சைவ சித்தாந்த வல்லுனராயும் கிரியா மார்க்கத்தை நன்கு தெளிந்தவராயும் விளங்கியவர் அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் ஐயா அவர்கள். இப்பெரியார் நாவலர் வழியில் நின்று சைவப் பயிரை வளர்த்த பெருமைக்குரியர். எமது தெல்லிப்பழை துர்க்காதேவி திருக்கோயில் கும்பாபிஷேகம், மகோற்சவம் ஆகியன அனைத்தும் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இவருடைய ஆலோசனையைப் பெற்றே நடைபெற்றது. ஆண்டுதோறும் ஆவணி மாதத்தில் ஓணத்தை இறுதியாகக் கொண்டு நடைபெறும் மகோற்சவங்களுக்கான ஒழுங்கு முறையை செம்மையாக நிறைவேறச் செய்த பெருமை இவர்களுக்கேயுண்டு. இதனை எமது தேவஸ்தானம் என்றென்றும் நினைவில் இருத்திக் கொள்கிறது.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் குருக்கள் ஐயாவின் திருவுருவச்சிலை நிறுவப்படுவது மிகவும் பாராட்டுக்குரிய நிகழ்ச்சியாகும். ஒவ்வொரு ஊரிலும் இத்தகைய நன்றி பாராட்டும் நினைவுகள் இடம்பெற வேண்டும். அச்சுவேலி என்றால் ஐயாவின் பெயர் தான் அறிஞர்கள் நினைவுக்கு வருகிறது. இதனை எமது இளம் உள்ளங்களும் அறிந்து கொள்வது வரவேற்கத் தக்கது. சிவாகம ஒழுங்குக்கமைய ஆலயங்கள் அமைய வேண்டுமென்ற உறுதியான உணர்வோடு சைவ நூல்களை எழுதி வெளியிட்ட குருக்கள் அவர்களின் கருத்துக்களை இன்று சைவப்பேருலகம் நன்கு வரவேற்பது கண்கூடு.

எனவே இப்புனிதப் பணியை மேற்கொள்ளும் சரஸ்வதி வித்தியாசாலை அதிபர், ஆசிரியர், நலன் விரும்பிகள் அனைவரையும் பாராட்டி வாழ்த்தி அமைகின்றேன்.

நன்றி.

தங்கம்மா அப்பாக்குட்டி
துர்க்காபுரம் மகளிர் இல்லம்
தெல்லிப்பழை.

உ

# வேதிய வித்தகர் ......................!!

நம. சிவப்பிரகாசம்
— இந்து சாதனம் ஆசிரியர்

வெண்பா

வேத சிவாகம மேன்மை விளங்க மெய்ப்
போத சிகாமணியாம் பொற்புலவன் — நாத
குருமணியாய் நின்ற குமாரசுவாமி
குருகுலக்கோன் எம் குரு.

வேதசிவாகம நிருபணம் என்றொரு நூல் இருபாகங்களாக அன்று வெளியிட்டுப் பேத விவாத பேதைகளுக்கு உண்மை உணர்த்திய ஆசான் அச்சுவேலி ஆதி வேதியர் குல ஞானபானு.

எண்ணும் எழுத்தும் என்று முன்னோர் எடுத்துரைத்த நுண்ணிய கருத்தினைப் பொருத்தமாக அமைத்து வினாவிடையாக குதர்க்கத்திற்குத் தர்க்கமாக சட்டமேதைகள் கூட வியப்புறும் வண்ணம் எங்கள் குருக்கள் பெருநூல் ஒன்றை வெளியிட்டார்.

விநாயகபரத்துவம் என்று தனது நாயகன் ஐங்கரனே என்ற உணர்வில் குருக்கள் அவர்கள் இயற்றிய நூல் இன்னொருவிதம். நாவலர் பெருமான் போன்று கல்விச் சாலைகள் அமைப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்த குருக்கள் அச்சுவேலியில் ஒரு சிறந்த பாடசாலையை அமைத்து நடாத்தினார். அவ்வண்ணமே பாலாவிக் கரையில் மேலோங்கும் திருக்கேதீஸ்வரத்தில் குருகுலம் அமைத்து அருகிப்போகும் ஆரிய, திராவிட கல்வி நெறியை நிலவவைத்துப் பெரும் தொண்டாற்றினார். இந்து சாதனம் என்ற எழில் மொழி இதழில் குருக்களின் கருத்து எப்பொழுதும் வெளியிடப்பட்டது. அவர்களுடைய நாமம் ஞாலம் விளங்க ஈழத்தின் தமிழ் மண்ணில் ஒரு நடுகல் நாட்டவேண்டியது எங்கள் கடமை இப் புனிதத் தொண்டிற்கு நாமெல்லோரும் அன்பு ஆதரவு நல்குவோமாக.

"வேத சிவாகம மெய் விளக்கத்திற்கு
இன்றியமையாது இலங்கிய
வேதிய வித்தகர்"

★

"குருக்கள் ஐயா அவர்கள் தமிழும் சமஸ்கிருதமும் முறையாக நன்கு கற்றவர் சிவாகம வல்லுநர், சைவசாஸ்திர நூல்களிலும் தோத்திர நூல்களிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர். ஆசாரசீலர், சைவப்பழம். ஆடம்பரமற்ற வாழ்க்கை நடாத்தும் இயல்புடையவர். இத்தகைய சைவப் பெரியார் நம் மத்தியில் வாழக் கிடைத்தது நாம் செய்த பூர்வ புண்ணிய பலனென்றே கூறலாம்."

திரு குலசபாநாதன்

# ஆசிரியத்துவம்

ம. கணபதிப்பிள்ளை
— பழைய மாணவர்

வாழ்வுக்கு அறிவு வேண்டும். அறிவென்பது அற்றம் காக்கும் ஓர் கருவி. வாழ்வில் ஏற்படும் இடர்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆட்பட்டு வாழ்வைப் பாழாக்காமல் காக்கும் கருவியது. ''மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்'' என்பது ஔவை மொழி. வாழ்விலே செய்யத்தக்கதெது தகாததெது என ஆய்ந்தறிந்து நன்நெறின்பால் வாழ்வை இட்டுச்செல்லும் உணர்வை அவ்வறிவு தந்து நிற்கும். வாழ்வை வளமூட்டப் பொருள்வேண்டும். அப்பொருளை ஈட்டுதற்கும் இவ்வறிவே துணை செய்கிறது.

இவ்வறிவை நாம் எங்ஙனம் பெறுகிறோம்? கல்வி கேள்விகளால் பெறுகிறோம். கல்வி என்பது நாம் முயன்று கற்கும் அறிவு. கேள்வியென்பது கற்றுணர்ந்தார் உரைப்பதை செவியால் கேட்டறியும் அறிவு. இவ்விரண்டின் வழி அறிவைப்பெற துணை செய்பவர் ஆசிரியப் பெருமக்களே.

நாம் முயன்று கற்கும் போது ஐயப்பாடு தோன்றுகிறது. தெளிவின்மை ஏற்படுகிறது. பொருளல்லவற்றைப் பொருளாக எண்ணும் மருள் ஏற்படுகிறது. இவ்வையப்பாட்டை நீக்கி, தெளிவின்மையைப் போக்கி, புரியாததைப் புரியவைத்து உண்மைப் பொருளை உணரவைத்து அறிவு வளரத் தூண்டுகோலாய் இருப்பவன் ஆசிரியனே. தாம் கற்று உணர்ந்ததை ஏற்றவிடத்து ஏற்ற வாறு எடுத்துரைத்து அறிவு சுடர்விட்டெரிய உறுதுணையாய் நிற்பவன் அவன்.

நம்முன்னோர் ஆசிரியனைக் குரு என்றனர். குரு என்றால் மேலானவன். தெய்வாம்சம் பொருந்தியவன் என்று பொருள். ''குருவில்லா வித்தை பாழ்'' என்பது முதுமொழி. இம்மொழி குருவில்லாமல் பெற்ற அறிவு பயனற்றது என்ற பொருளைத் தருகிறது. இதிலிருந்து ஆசிரியனது முக்கித்துவமும் மேன்மையும் புலப்படுகின்றதன்றோ!

சிறந்த பணிகளுள் ஒன்று ஆசிரியப்பணி. அது புனிதமான பணி. தொண்டுள்ளம் அதில் கலந்துவிட்டால் அதற்கு இணையேதும் இல்லை. நாட்டுக்கு வேண்டிய நல்ல மக்களை உருவாக்கும் பணி அவனைச் சார்ந்தது. விழுமிய செல்வமான கல்வியை ஊட்டும்போது மாணவர்பால் தாமொரு நன்மையையும் எதிர்பார்ப்பதில்லை. அவரது எதிர்பார்ப்பெல்லாம் கல்வியில் அவன் சிறந்து விளங்க வேண்டும் என்பதுவே. தமது மாணவன் அறிவிலே தம்மைக்காட்டிலும் உயர்வடைந்து விட்டால் அதைக்கண்டு ஆசிரியன் மனம் பொருமுவதில்லை, பொறாமைப் படுவதில்லை. ஆனால் வியந்து நிற்கிறார்; பெருமைப்பட்டுக் கொள்கிறார்.

தன்னூரும் தன்னாடும் என்று வாழ்ந்த மனிதன் இன்று உலகை அயல்வீடாகக் கொண்டு வாழும் காலமிது. அறிவியல் வளர்ந்ததால் ஏற்பட்ட பலன் இது. துறைதோறும் நுண்ணியதாக ஆய்ந்த அறிவின் பயனிது. அதனால் எண்ணும் எழுத்தும் என்றளவில் நின்ற கல்வியானது கிளை விட்டு பல்கி - பெருகி - வியாபித்து நிற்கிறது. உலகோடு ஒன்றி இணைந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்ட நாம் பல துறைகளிலும் பொதுவான அறிவைப் பெற்றாக வேண்டும். அவ்வறிவை ஊட்டுகின்ற ஆசிரியனது பணி இங்கு மேலோங்கி நிற்கிறது.

ஆசிரியப்பணியில் இறங்கிவிட்டால் கற்றலை அவர் இறுதிவரை விடக்கூடாது. திசைதோறும் வெளிவருகின்ற நூல்களையும் ஆய்வுகளையும் அவர் தேடிக்கற்க வேண்டும். அவ்வண்ணம் தேடிக்கற்றதை ஏற்ற ஏற்ற இடத்தில் ஏற்ற ஏற்ற அளவில் பிறர்க்கு எடுத்துரைத்து அறிவை வளமாக்க வேண்டும்.

இப்பணி பூண்டவர் தம்மை உயர்வான நிலைக்கு ஆளாக்கிக் கொள்ள வேண்டும். அன்பு, இன்சொல், அடக்கம், பொறுமை இப்பணிகளை அவர் பூணவேண்டும். விழுமிய செல்வமாம் ஒழுக்கத்தை அவர் கடைப்பிடிக்க வேண்டும். அங்ஙனம் அவரிருக்கும் போதுதான் அவர்மீது மாணவர்களுக்குப் பக்தியும் பயமும் ஏற்படும். அந்நிலையில் இருந்து கற்கும் கல்வியே கல்வி. உள்ளார் முன் இல்லார் போல் ஏசற்று நின்று கற்கும் கல்வியே அது. என்றாலும் சாகாத கல்வியே அது.

இப்பணி தலைமேற்கொண்டோர் அகன்ற ஆழமான அறிவைக் கூர்மையாக்கிக் கொள்ள வேண்டும். சிந்தனைத் திறன் கொண்டும் உலக அனுபவத்தைக் கொண்டும் தமதறிவை அவர் கூர்மையாக்கிக் கொள்ளலாம். மாணவர் தரமறிந்து, மாணவர் நிலையறிந்து கல்வியைப் புகட்டுகின்ற திறன் கூர்மதி படைத்தவர்க்குத்தானுண்டு. – அது ஆசிரியன் தான்.

உலகம் இப்பணியின் சிறப்பைக் கண்டன்றோ உலகளாவிய ரீதியில் ஆசிரிய தின விழாவைக் கொண்டாடி நிற்கிறது.

ம. கணபதிப்பிள்ளை


"அல்லவை தேய அறம் பெருகும்"

— மலர் சிறப்புற மனதார வாழ்த்துகிறோம் —

★ துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் ★

(புகழ்பெற்ற புத்தக வியாபாரிகளும், தினசரி வார பத்திரிகைகளின் பிரதம முகவர்களும்)

பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம்.

உ

வலயம் II

## கல்விப்பணிப்பாளர் க. கந்தசாமி அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை தனது 75ஆவது ஆண்டு சேவையை நிறைவு செய்து பவளவிழாக் கோலம் கொண்டு ஆடம்பரமாக மலர் வெளியீடு செய்யும் இவ் வேளை வித்தியாசாலை வளர ஆசிச் செய்தி வழங்குவது இத்திணைக்களத்திற்கும் எனக்கும் மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

யாழ்ப்பாணத்து மக்கள் வரலாற்றில் பாடசாலை வரலாறும் ஒரு முக்கிய அங்கமாகும். கல்வி வழங்கி நற்பிரசையாக வாழ வைத்ததும் மட்டுமல்லாது எமது சமூக இசைவாக்கத்திற்கும் பாடசாலைக் கல்வி பெரும் பங்காற்றியுள்ளது. குறிப்பாக 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் அந்நியரின் பண்பாட்டுச் செல்வாக்கிலிருந்து நம் மக்களைக் காப்பாற்ற ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் பல. இவை நமது பண்பாட்டின் தூண்களாகவே உள்ளன. இவை ஆரம்பிக்கப்படாதிருந்தால் நம் கல்வி, பண்பாடு எத்திசை சென்றிருக்குமோ தெரியாது. எமது மொழி, கலை, பண்பாடு யாவுமே தாறுமாறாக புறழ்ந்திருக்கும் இவ்வகையில் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையும் பெரும் பங்கு ஆற்றியுள்ளது. மொழிப்பற்று, பண்பாட்டுப்பற்று, சமயப்பற்று ஆகியவற்றால் உந்தப்பட்டு சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் அவர்களால் இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டது. தனது நோக்கையும் இலக்கையும் தவறாது அச்சுவேலி மக்களுக்கு வாழ்க்கை நெறியையும் புகட்டியும் உள்ளது. இச்சேவை மகத்தான சேவையே.

இன்று இப்பாடசாலை திருமதி கனகராசா சகுந்தலாதேவி அவர்களின் தலைமையில் துடிப்பாக இயங்குகிறது. ஆசிரியர், பெற்றோர், பழையமாணவர் ஆகியோரின் உதவி ஒத்தாசை ஊக்கம் பெற்று மேலும் பேராலயமாக வளர வாழ்த்துகின்றேன்.

---

உ

உதவிக் கல்விப் பணிப்பாளர்

## திருமதி அ. வேதநாயகம் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

நாவலர் பணியைத் தொடர்ந்த சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்களால் ஆரம்பிக்கப்பட்ட சரஸ்வதி வித்தியாசாலை இன்று பவள விழாக்காணும் அளவிற்கு வளர்ச்சி பெற்றமையைக் கண்டு பெருமிதம் அடைகின்றேன். சைவமும் தமிழும் தமிழர் தம் இரு கண்களாகும். இவ்விரு துறைகளிலும் இவ்வித்தியாலயமும் வளர்ச்சியுடன் இணைந்து வருவது பெருமைக்குரிய விடயமாகும். கல்வித்துறையில் மட்டுமின்றி சமயத்துறையில் கூட விவேகானந்த சபையினரின் பரீட்சையில் இப் பாடசாலை மாணவி தங்கப்பதக்கத்தைத் தட்டிக் கொண்டமை பராட்டுக்குரியது. இப்பாடசாலையின் பழைய மாணவியாகிய நான் இப் பாடசாலை மகா வித்தியாலயமாக வளர்ந்து நூற்றாண்டு விழாவைக்காண வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

உ

# கலைமகள் கருணையாமே!

இளம்பிறை முடியோன் யார்த்த இயற்கைசேர் அவனியென்னும்
அழகுறு நங்கையாளின் அணிதிகழ் வதனமான
இலங்கையின் நுதலாய் நீண்டு இடம்பெறும் தமிழீழத்தின்
இலங்கிடும் திலகமென்று இசைவதாம் ''அச்சுவேலி''

உருப்பெரு வடிவங்கொண்ட உலவிற்குளத்தோன் தாசன்
குருக்களாம் குமாரசுவாமி கோவிலின் மேற்குத்திக்கில்
திருப்பெரும் வாணியான தெய்வப்பேர் தனிலமைத்த
தருமம் தோய் பாடசாலை சரஸ்வதி வித்தியாலயம்

பெருந்தவப் பேறுபெற்றுப் பிறந்தபின் குமாரசுவாமி
குருக்கள் தன் கல்விவேட்கைக் கூர்மையால் நிறுவித்தந்த
கருப்பொருள் மலிந்து தேங்கும் கல்விசேர் நிலையமான
சரஸ்வதி வித்தியாசாலை தழைத் தெழுபத்து ஐந்தாம்

அகவையில் அடியை வைக்க அன்பர்கள் அணிதிரண்டு
பகலவன் வரவுகண்ட பங்கஜ மலர்கள் போல
நிகரில்லாப் பொலிவு நோக்கி நிகழ்கின்ற பவளவிழா
சகலரும் போற்றி வாழ்த்தத் தரணியே மகிழுதந்தோ!

எண்ணிலா அதிபராண்கள் இதுவரை கடமை செய்தும்
சண்டிகைக் கருத்துப் பேணும் சகுந்தலாதேவி யிங்கு
தொண்டு செய்காலம் தன்னில் துரிதமாய் வளர்ந்து விழா
கண்டிட வைத்ததெல்லாம் கலைமகள் கருணையாமே!

— அச்சுவேலியூர் ஆவன்னா லோகேஸ்வரன்
(பழைய மாணவன்)

# விழா எடுப்போம் .............!!

பிரதி அதிபர் சி. தங்கவேலு

" சின்னஞ் சிறிய இளைய
மனங்களைச் சீர் படுத்தி
நன்நெஞ்ச மாக்கி நலம் பண்ணும்
நன்றியை நாம் மறவோம்
பென்னம் பெரிய விழாச் செய்தல்
தக்கதே; பீடுபெற்று
மின்னும் கலைக்கூடம் மேன்மேலும்
பண்பட்டு மேம்படுமே "

கல்விச் சாலைகளில் – வித்தியா கூடங்களில் விழாக்கள் அவசியமா ? என்று கேட்கும் குறுகிய நோக்கர்களுக்கு கவிஞர் முருகையனின் கவிதை விடையாகின்றது.

கல்லூரிகள் – பாடசாலைகளில் வருடா வருடம் பரிசளிப்பு விழா நடைபெறுகின்றது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் கல்வி நிலையை அறியவும் மாணவர்களின் கல்விக்கு ஊக்கம் கொடுக்கவும் இவ்விழா அவசியமாகின்றது வெள்ளிவிழா, வைரவிழா, பவளவிழா, பொன்விழா எனப் பாடசாலையின் அல்லது நிறுவனங்களின் விழாக்கள் தொடர்கின்றன. பாடசாலையின் அல்லது கல்லூரியின் வரலாற்றை வளர்ச்சியை அறிந்துகொள்ள இவ்விழாக்கள் துணைநிற்கின்றன. சமய கலாச்சார விழாக்கள் மாணவர்கள் மத்தியில் மதப்பற்றையும் கலைபண்பாட்டையும் ஊட்டுவதற்கு ஏதுவாகின்றன. அந்தந்த நிறுவனங்களில் நிகழும் விழாக்களைக் கொண்டு அவற்றின் வளர்ச்சியை மதிப்பீடு செய்யலாமல்லவா ? மாணவர்கள் புத்தகப் பூச்சிகளாக மட்டும் இருந்துவிடாது விளையாட்டு, நுண்கலை ஆகியவற்றிலும் ஈடுபடுவது அவர்களின் உளவளம் விரிவடைய உதவுகின்றது என்பது உளநூல் வல்லுனர்களின் கருத்தாகும்.

எமது பாடசாலை நிறுவப்பட்டு எழுபத்தைந்து ஆண்டுகள் ஓடிவிட்டன. இவ்வரலாறே இன்று " பவள விழா " நிகழ்வாக பரிநாமம் பெற்றுள்ளது. கடந்த ஆண்டு எமது பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்புவிழாவில் இப்பாடசாலையின் ஆரம்பகாலம் தொடக்கம் சேவையாற்றிய அதிபர்களின் நிழற்படங்களை வைத்து மாணர்களுக்கு இப்பாடசாலையில் சேவையாற்றிய கல்விமான்களை நினைவு படுத்தினோம். இன்று பவளவிழாவில் இப்பாடசாலையை நிறுவிய சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்களின் திருஉருவச் சிலை வைத்து அப்பெரியாரின் தொண்டை மொழிப்பற்றை, சமயப்பற்றை மாணவர்களுக்கும் மக்களுக்கும் உணர்த்த பழைய மாணவர் சங்கம் முன்வந்துள்ளது பெருமைக்குரியதே.

ஆத்மீக வழியில் அல்லாது அறவழியிலும் அருந் தொண்டாற்றிய பெரியார்களின் நினைவு என்றும் உலகில் மக்கள் உள்ளங்களில் நிலைத்து நிற்கும் " ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் முடிந்த பரோபகாரத்தைச் செய்து வந்தால் உலகத்தில் துக்கமே இருக்காது " என்பது ஓர் பேரறிஞரின் வாக்கு.

சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் ஐயாவை நான் நேரில் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்காவிட்டாலும் அப் பெரியாரின் உள்ளத்தை உணர்வை வித்தியாபக்தியை இப்பாடசாலையில் கண்டேன். இன்று உருவச்சிலையாகக் கண்டு தரிசிக்கின்றேன். இதற்காகவேனும் என் போன்றோர்க்குக் கூட இவ்விழாவே உதவியது என்பது உண்மையே.

" நல்ல மனிதனின் இதயம் இந்த உலகில் ஆண்டவனுடைய ஆலயம் " — திருமதி நெகார்.

இவ்விழாவை அமைத்த எல்லோர்க்கும் எம் நன்றி.
வாழ்க சரஸ்வதி வித்தியாலயம் ! வளர்க இதன் கல்வித் தொண்டு!!

உ

~~கோப்பாய்~~ பிரதிக் கல்விப் பணிப்பாளர் வலயம் 2

## இ. சிவானந்தன் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

பவளவிழாக் கொண்டாடும் இவ்வேளையிலே இவ் வித்தியாசாலையின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி உழைத்த அதிபர்களையும், ஆசிரியர்களையும், பழையமாணவர்களையும் நினைவு கூற வேண்டும். அவர்களின் கல்விப்பணியால் இன்றும் உருக்குலையாது பெருமையுடன் உயர்ந்து விளங்கும் இவ் வித்தியாசாலை இப்பிரதேச மாணவர்களின் நிறைவான கல்விக்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.

இவ் வித்தியாலயம் வளர்ச்சியுற்று தன் கல்விப்பணியை சீராக நிறைவேற்ற வேண்டுமென்று ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

யா / அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் கடந்த 75 ஆண்டுகளாக இப் பிரதேச மக்களுக்கு கல்வி ஒளி பரப்பி பவளவிழாக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆலயச்சூழலில் எம்முன்னோரால் ஆரம்பிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட இவ்வித்தியாலயம் எமது மாணவர்களுக்கு சைவ பாரம்பரியங்களுடன் கல்வியறிவூட்டி வருவதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும்.

இவ்வித்தியாலயத்தில் கல்விகற்று உயர்ந்த பலர் பவளவிழாவில் பங்கு கொண்டு சிறப்பிப்பது தம்மை வளர்த்து உருவாக்கிய கல்விக் கூடத்திற்கு செய்யும் பிரதியுபகாரமாகும்.

உ

கோப்பாய் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

## பொ. வீரபத்திரன் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

அச்சுவேலிக் கிராமத்தில் மங்காத அறிவொளி பரப்பும் யா / அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை எழுபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்து பவள விழாக்காணும் இவ் வேளையில் இக் கலைக்கூடத்தை வாழ்த்துவதில் பெருமைப்படுகிறேன்.

விநாயகர் ஆலயத்தருகே அமைந்த தோடமையாமல் ஆலயத்தின் முழுப்பயனையும் மாணவர் பெறுமாறு ஆலயத்தின் நிர்வாகத்துடன் இவ்வித்தியாலய நிர்வாகமும் இணைந்து செயற்படுவது போற்றுதற்குரியதாகும்.

தொன்மையையும், பாரம்பரியத்தையும், சைவத்தையும் கொண்டதான இக்கல்வி நிலையம் பலகல்விமான்களை உருவாக்கியுள்ளது. மேன்மேலும் இக்கிராம மக்கள் இப்பாடசாலை மூலம் சகல கல்வியையும் பெற தன்தரத்தில் உயர்ச்சியும் எழுச்சியும் அடைய எனது வாழ்த்துக்கள்.

எந்திர வேலைகள் சிறந்திடவும்—ஏற்றவன் கைத்தொழில் தெரிந்தவனே
மந்திரத்தால ஏதும் வந்திடுமோ? மனிதன் செய்ததே எந்திரமும்!

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை பவள விழா
குருக்கள் சிலை திறப்புவிழா இனிதே நிகழ
வாழ்த்துகிறோம்.

எல்லாவிதமான டி. வி. வீடியோ
பழுது பார்த்தல்—ஒரே நாளில்!

ஹய் - பை றேடியோ உத்தரவாதத்துடன் திருத்தித் தரப்படும்

ராஜன் இலத்திரனியல் நிலையம்

வல்லை வீதி,
அச்சுவேலி.

உரிமையாளர் ; நடராஜா - சிவகுமார் (ராஜன்)

---

பவளவிழா சிறப்புற
வாழ்த்துகிறோம்

S. செல்வராசா

பிரதான வீதி,
அச்சுவேலி.

---

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
பவளவிழா சிறப்புற
வாழ்த்துகிறோம்

வீரவாகு
வியாபார நிலையம்

( பலசரக்கு மாளிகை )

பிரதான வீதி,
அச்சுவேலி

# யாழ்/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை



பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள்


1994




பவளவிழா மலர் நிர்வாகி,
பாடசாலை நலன் விரும்பி

திரு. நா. கணபதிப்பிள்ளை
கலா வினோதன்
"சின்னமணி"
அச்சுவேலி.

# யாழ்/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை



பாடசாலை ஆசிரியர்கள்



ஆசிரியர் தினவிழா 1993

# எம் நெஞ்சங்களில் பாட்டாவின் நினைவுகள்

— பாலபண்டிதர் சிவஸ்ரீ கு. வை. விருத்தகிரீஸ்வரக் குருக்கள் —

சைவசமயத்தவர்களும் — பிரதிஷ்டா, கிரியா வேத பண்டிதர்களும் என்றும் நினைவில் வைத்திருக்கும் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் எமது பாட்டனார் என்பதையும், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் ஸ்தாபகர் என்பதை நினைக்கும் போது அவர் வழித்தோன்றல்கள் என எண்ணும் போது அவர் நினைவுகள் நெஞ்சில் நிழலாடுகின்றன.

தமிழ்மொழியும் சைவசமயமும் மேலோங்க வேண்டுமென்ற நல் நோக்கோடு அச்சுவேலியிலல்லாது மருதங்கேணி — சோரன் பற்று ஆகிய கிராமங்களிலும் சைவ பாடசாலைகளை ஸ்தாபித்தார். இப்பாடசாலைகள் யாவும் தம் சொந்தப் பணத்தில் வாங்கப்பட்ட காணிகளில் ஸ்தாபித்தார் என எண்ணும் போது எம் நெஞ்சங்கள் அவர் கொடைத் திறனையும் அவரின் தார்மீக சிந்தனையையும் நினைக்கின்றது. அவர் வழியில் நாமும் நடப்போமா? என எண்ணத் தூண்டுகின்றது.

ஒரு தாசப்த காலத்தின் முன் தன் இல்லத்தில் இயங்கிவந்த திண்ணைப் பாடசாலையை சரஸ்வதி வித்தியாலயமாக உலவிற்குளம் கரை சித்திவிநாயகர் ஆலயத்தின் மேலைவீதியில் அமைத்தார் என்பதற்கு காரணம் இல்லாமலில்லை. தாமே இவ்வாலயத்தின் பிரதம குருக்களாகவும் இவ்வூர் சைவ சமயத்தவர்களுக்கு தீட்ஷா குருவாகவும் விளங்கிய காரணத்தினாலும் வித்தியாலயமும் இறை ஆலயமும் ஒன்றிணைந்தால் ஆத்மீகமும் சமயமும் வளர்ச்சியடையுமென்ற நன் நோக்கமே ஆகும்.

இந் நன்னோக்கத்தினால் தான் முன்னைய காலங்களில் இப் பாடசாலையைத் தொடங்கு முன் ஆசிரியர்களும் மாணவர்களும் சித்திவிநாயர் கோயிலில் சென்று வழிபாடு செய்த பின் பாடசாலை வகுப்புக்களை ஆரம்பிக்கும் ஒரு சம்பிரதாயம் குருக்கள் அவர்களால் முன்வைக்கப்பட்டிருந்தது. இப் பண்பாடு பலகாலம் நீடித்தாலும் பின் அது ஏனோ கைவிடப்பட்டதென்பது அறிகிலேன்.

அக்காலவோட்ட சூழ்நிலைக்கேற்ப இப்பாடசாலை இயங்கி வந்தாலும் எதிர்கால தீர்க்க தரிசன நோக்கோடு சில நற்செயல்களை புரிந்திருக்கிறார் என்பதையும் நினைவில் நினைக்கிறேன். சைவப் பாடசாலைகளில் சமாசனம் கொடுப்பதற்கு பல ஆசாரவைதிகர்கள் மத்தியில் இருந்த எதிர்ப்புக்களை பொருட்படுத்தாது சைவசமயமும், தமிழ்மொழியும் மேலோங்க வேண்டுமென்ற எண்ணத்தை மட்டும் மனதில் கொண்டவராய் சைவப் பாடசாலைகளின் மத்தியில் எதுவித விளம்பரமுமின்றி முதல் முதல் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் தனது நிர்வாகத்தின் கீழ் சமாசனம் கொடுத்த குருக்கள் ஐயா அவர்களின் துணிவையும் இங்கு எமது நெஞ்சம் நினைக்கின்றது.

ஆங்கிலத்தில் இலண்டன் மற்றிக்குலேஷன் சித்தியெய்தியவரும் குருக்கள் ஐயா இடமும் புலோலி ம. முத்துக்குமாரசாமியிடமும் வடமொழியும் தென்மொழியும கற்றவருமான தனது மகன் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்களை தான் வெளியிடும் நூல்களை எழுதுவதற்கு உறுதுணையாகவும் வைதீக மரபை காத்து வருவதற்கு தன் இறப்பு வரை கூடவே வைத்திருந்தார் என்பதும் எம் நெஞ்ச அலைகளில் நீங்க முடியவில்லை.

எமது பாட்டனாரின் சாதனைகளை எழுதுவது ஒரு தனிநூலாக வெளியிடலாம். ஆனால் விழாமலர் நீண்டுவிடுமே என்ற காரணத்தினால் பவள விழா காணும் சரஸ்வதி வித்தியாசாலையை வாழ்த்துவதோடு பாட்டனாரின் நினைவுகளை இவ்வூர் மக்கள், பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் நெஞ்சங்களில் நிழலாட விடுகிறேன்.

★

உ

சிவமயம்

சிவாகம ஞானபாஸ்கர்
**ஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்**
தர்மசாஸ்தா குருகுலம்
இணுவில்.

# "குருமார்களின் பிதாமகர்............"

சிவபெருமானுடைய வழிபாட்டுக்கு கிரியை வழித்துணைபுரிவது பத்ததிகளேயாம். இற்றைக்கு 50 ஆண்டுகட்கு முன்பு நடைமுறையிலிருந்த கிரியைகளைக் காட்டிலும் இப்பொழுது நடைமுறையிலிருக்கும் கிரியைகளில் விரைவும் நிச்சயத்தன்மையும் நன்றாகத் தென்படுகிறது. இதற்கு துணைநிற்பது அச்சுவேலி தந்த சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் அவர்கள் ஆக்கியும் தொகுத்தும் உதவிய பத்ததிகள் தான் என்றால் அது மிகையாகாது.

முதன்முதல் சிவனுடைய அனுக்கிரகம் பெற்ற பதினெட்டுப் பேர்களால் தான் பத்ததிகள் உருவாக்கப்பட்டன. அவைகள் ஏட்டிலேயே இருந்து வரன்முறையாகக் காப்பாற்றப்பட்டு வந்தன, ஆகவே மிகச்சிலர் தான் கிரியைகளில் பாண்டித்தியம் உடையவர்களாக இருந்தார்கள். அந்தச் சிலரும் தங்கள் தங்கள் வழித்தோன்றல்களுக்கு கிரியைகளில் ஒழுங்குமுறைகளையும் விளக்கங்களையும் தெரிவித்தார்களேயன்றி பொது நன்மை பயக்கக் கூடிய விதத்தில் பிரசித்தஞ்செய்யவில்லை. மிகச்சிலர் தான் பொதுநலத்தோடு எல்லோரும் கிரியைகளை உணர்ந்திருக்க வேண்டுமென்ற தர்மசிந்தனையோடு சில நூல்களைத் தொகுத்துதவினார்கள். அவர்களின் முதன்மை வகிப்பவர் குருமார்களால் பூசித்து வணங்கும் தகுதி பெற்று விளங்கிய அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் ஆவார். முதன்முதலில் அவர் தொகுத்து வெளியிட்ட சிவாகமசேகரம் சிவலிங்கப்பிரதிட்டாவிதி இரண்டுமே குருமார்களுக்கு வழிகாட்டியது. அதுமட்டுமல்லாமல் விநாயக, சுப்பிரம்மணிய, வைரவ பிரதிஷ்டாவிதி பத்ததிகளும் குருமார்களுக்கு எல்லாச் சந்தேகங்களையும் நீக்கி கிரியை சாஸ்திரங்களில் ஒரு நிச்சயத்தன்மையை உண்டாக்கின. சிவபூஜாவிதி அக்னிகார்யவிதி முதலிய இன்னோரன்ன நூல்கள் பொழிப்புரைகளுடன் வெளிவந்து சிவபூஜையை நன்கு விளங்கக்கூடியதாகவும் அக்னிகார்யத்தை நன்கு புரிந்து கொள்ளக்கூடியதாகவும் அமைந்தன. இவையெல்லாம் குருக்கள் ஐயா அவர்கள் நமது சைவசமயத்திற்கும் குருமார்கட்கும் செய்த பேருதவியாகும். இதெல்லாவற்றையும் விடச்சிறப்பு அவர் அதிபராக இருந்து நடாத்திய திருக்கேதீஸ்வரம் சிவானந்தகுருகுலம்தான். ''குருகுலம்'' என்பது என்ன வரைவிலக்கணத்திற்குள் அமைய வேண்டுமோ அந்த வரைவிலக்கணத்திற்க அமைய நடாத்தி பெரும்பணி புரிந்து அந்தணச் சிறார்களைக் கல்விமான்களாக்கிய பெருமை உன்னி மகிழ்வதற்குரிய ஒன்றாகும்.

குருக்கள் ஐயா அவர்கட்கு வருடாவருடம் விழா எடுத்தலே சாலச் சிறந்ததாகும். அப்பெரியாரால் நிறுவப்பட்ட சரஸ்வதி வித்தியாசாலை பவளவிழா காண்பதையிட்டுப் பெரிதும் பெருமை அடைகிறேன். அத்துடன் குருமார்களின் பிதாமகனாகிய சிவஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் அவர்கட்குச் சிலை நிறுவமுன்வந்த இப்பாடசாலை பழைய மாணவர் சங்கத்தையும் - ஆசிரியர்களையும் நல்நோக்கமுள்ள பெரியார்களையும் வாழ்த்துகிறேன்.

# ஞான தாதா

பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா

சிவாசாரிய திலகமாய் விளங்கிய சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்களால் 1918 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சரஸ்வதி வித்தியாசாலை மகாவித்தியாலயமாய்ப் பெருவளர்ச்சி பெற்றுப் பவளவிழாக் கொண்டாடுகின்ற இத்தருணத்தில் அதனை நிறுவிய கருணா மூர்த்தியான குருக்களவர்களின் நினைவுச் சின்னமாகத் திருவுருவச் சிலை நாட்டுவதும், நினைவுமலர் வெளியிடுவதும் வித்தியாலத்தின் பழைய மாணவர்களதும் இப்போதைய அதிபர் ஆசிரியர்களதும் நன்றியுணர்வை வெளிப்படுத்தும் நற்பணிகளாகும். இவர்களனைவரும் எல்லோரின் பாராட்டுக்கும் இறைவன் திருவருளுக்கும் பாத்திரர் ஆவார்கள்.

இந்த நன்னாளில் குருக்களவர்களின் கல்விப் பணிகளை நினைவு கூறுதல் பயனுடையதாகும்.

குருக்களவர்கள் நீர்வேலிச் சிவப்பிரகாச பண்டிதரிடம் தமிழும் வடமொழியும் சமய சாத்திரங்களும் நன்கு கற்றுச் சிவாசாரியராகித் தம் முன்னோர் போற்றிய விநாயகப் பெருமானது ஆலயத்தில் நித்திய நைமித்திகங்களை நிறைவேற்றும் சமயப்பணியில் தமது வாழ்க்கையைத் தொடக்கியவர். இத்தகைய சமயாசாரியரொருவர் சமயபணிகளில் மாத்திரம் ஈடுபட்டிருந்தாரென்றால் அச் செயல் பெரிய பாராட்டுக்கு உரியதொன்றன்று. ஏனெனில் அது சிவாசாரியர் செய்ய வேண்டிய கடமையே ஆகும் எங்கள் குருக்களவர்களோ சமயக் கடமைகளோடு நின்றுவிடாமல், கல்விப்பணியிலும் கவனம் செலுத்தத் தொடங்கினார். தமது இருபத்து நான்காம் வயதில் பிராமணப் பிள்ளைகளையும் சைவப் பிள்ளைகளையும் சேர்த்துத் தமது இல்லத்திலேயே தமிழும் வடமொழியும் சமயமும் போதித்தார். ஏழெட்டு ஆண்டுகள் இப்பணி தொடர்ந்து நடந்தது. இதன் பின் அவரது சிந்தனை மேலும் விரிவடைந்தது. குருமாராய் வரக்கூடியவர்களுக்குத் மாத்திரம் கல்வியறிவூட்டுவதால் சைவசமயம் வளர்ந்து விடாதென்றும் சைவமக்கள் அனைவரும் கல்வியறிவு பெற்றாலே சமயம் வளர முடியுமென்றும் சிந்தித்து முடிவு செய்தார். தமது ஊரில் சைவ பாடசாலை இல்லாமையால் பல பிள்ளைகள் கல்வி பெறாதிருப்பதையும் மிஷன் பாடசாலைகளிற் படிக்கும் பிள்ளைகள் மதமாற்றம் பெறுவதையும் கண்டு கவலை கொண்டார். நாவலர் பெருமானின் கல்விப் பாரம்பரியத்தில் வந்தவராகையால் தியாக சிந்தனையோடு பிள்ளையார் கோவிலின் பின்புறக் காணியை விலைக்கு வாங்கினார். அதில் சரஸ்வதி வித்தியாசாலையைத் தாபித்து அங்கு தாமும் ஓர் ஆசிரியராய்ச் சில ஆண்டுகள் பணியாற்றினார். தம் ஊரில் மாத்திரமன்றிப் பின் தங்கிய கிராமங்களிலும் பாடசாலைகளை நிறுவினார். பளைக்கு அயலிலுள்ள சோரன்பற்று என்னுமிடத்திலும் மருதங்கேணியிலும் அவர் தொடக்கிய பாடசாலைகள் பின்பு சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டன.

இவற்றிற்கும் மேலாக, நாவலர் வழியில் நின்று மாணவர்க்கேற்ற சமயபாட நூல்களையும், மற்றையோர்க்கேற்ற சமய நூல்கள் பலவற்றையும் எழுதி வெளியிட்ட இரு பத்திரிகைகளையும் ஆசிரியராயிருந்து நடத்தினார். சமய விரோதச் செயல்களை எதிர்த்துக் கண்டனங்களைத் துண்டுப் பிரசுரங்களாகவும் வெளியிட்டார்.

இல்லறத்திலிருந்துகொண்டு, ஆலயசேவை புரோகிதக் கடமைகளோடு. மேற்காட்டிய பன்முகப்பணிகளையும் ஒருவர் நிறைவேற்றுதல் இயலாத காரியமாகும். இயலாத காரியத்தைச் சாதித்த சாதனையாளர் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள். அவர் பரிசோதித்து வைத்த கையெழுத்துப் பிரதிகளை அழியவிடாமல் அச்சேற்றுவதும், அச்சிட்டவற்றுள் இப்போது கிடையாதவற்றை மறுபதிப்புச் செய்து காப்பதும் சைவாபிமானிகளின் நீங்காக் கடமையாம். உருவச்சிலைபோலவே நூல்களும் நினைவுச் சின்னங்களே.

குருக்களவர்களின் பெயரும் புகழும், அந்த ஞான வள்ளல் வளர்த்த வித்தியா தருமங்களும் மேன்மேலும் வளர்ந்தோங்க விநாயகப்பெருமான் அருள் பாலிப்பாராக.

''மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்''

உ
கணபதி துணை

# பாடசாலையின் அபிவிருத்திப் பாதையில்.........நாம்

அந்த நிறுவனத்தினதும் வளர்ச்சிக்கும், வளத்திற்கும் உறுதுணையாக இருப்பது அந்தந்த நிறுவனங்களின் நிர்வாகிகளேயாவர். இதனடிப்படையில் பாடசாலை என்ற நிறுவனத்தில் வளர்ச்சிக்கும் அதன் நிர்வாகத்தின் முதுகெலும்பாக அமைந்திருக்கும். பாடசாலை அபிவிருத்திச்சங்கமும் / சபையும் / பழைய மாணவர் சங்கமும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இதன் அடிப்படையில் எமது இச் சங்கங்கள் அனைத்தும் பாடசாலை நிர்வாகத்துடன் நல்ல முறையில் இணைந்து செயலாற்றி வருவது சிறந்த ஒரு அம்சமாகும். இதற்குச் சான்றாகவே இன்று பாடசாலையின் பவள விழாவும், நிறுவுனர் சிலை திறப்பு விழாவும் பவள விழா மலர் வெளியீடும் நடைபெறுகின்றன.

பாடசாலையின் நிர்வாகத்துடன் முரண்பாடு இல்லாத வகையில் கல்வி அபிவிருத்திக்கும் ஏனைய பௌதிக வளவிருத்திக்கும் எமது சங்கங்கள் சகல ஒத்துழைப்புக்களையும் நல்கி வருகின்றோம். நிர்வாகத்தலைவருடன் தோளோடு தோள்நின்று நாம் உழைத்து இன்று பவள விழாக்காணும் பேற்றினை அடைந்துள்ளோம். பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இயங்கி வந்த அபிவிருத்திச் சங்கத்தில் இருந்தும் பழைய மாணவர் சங்கத்தில் இருந்தும் ஆசிரியர் குழுவில் இருந்தும் சமத்துவமான முறையில் ஒன்பது அங்கத்தவர்களைத் தெரிந்து எடுத்து அதிபரும் ஒரு நலன் விரும்பியும் உட்பட பதினொரு உறுப்பினர்களைக் கொண்டதாக அரசின் சட்ட திட்டங்களிற்கு அமைய அமைக்கப்பட்டதே அபிவிருத்திச்சபையாகும், பாடசாலையில் கல்வி கற்ற பெருமைக்கும், புகழுக்கும், பழமைக்கும் கருவூலங்களாக விளங்குவோரே பழைய மாணவர் சங்கத்தினர் ஆவர்.

இம் மூன்று அமைப்புக்களும் சிறப்பாக இயங்கி வருவதைக் காட்டுவதே இன்றைய நிகழ்வுகளாகும். எங்கள் ஆலோசனைகளையும், அபிவிருத்தித்திட்டங்களையும் செவிமடுத்துச் செயலாற்றி வருகின்ற அதிபர்களை ஆசிரியர்களையும் நாம் மனமார வாழ்த்துகின்றோம். சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலை இன்று பவள விழாக் கோலம் கொண்டுள்ளது சிறப்பு அம்சமாகும். இன்று போல என்றும் நாமும் பாடசாலையும் இணைந்து செயலாற்றி நூற்றாண்டை நோக்கி வீறு நடைபோட்டு வெற்றிவிழாக்காண ஐங்கரனை வேண்டுகிறோம். இப் பெருவிழாவிற்கு பெரும் பணியாற்றிய பழைய மாணவர் சேவை மேன்மேலும் வளரவேண்டுமெனச் சித்திவிநாயகனை வேண்டுகின்றோம். எல்லாப்பணிகளும் சிறப்புற நடைபெற ஊக்குவித்த நலன் விரும்பி திரு. கா. ந. கணபதிப்பிள்ளையையும் (சின்னமணி) வாழ்த்துகின்றோம்.

வாழ்க நம்பாடசாலை வளர்க நற்பணிகள்.

திரு. கி. வரதராசன்
(பழைய மாணவர் சங்கம்)

திரு. சி. இரத்தினசிங்கம்
(பெற்றார், அபிவிருத்திச் சபை)

திரு. ந. சந்திரபோஸ்
(பெற்றார் அபிவிருத்திச் சங்கம்)

" கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே "

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை பவளவிழா
நிறுவனர்
சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள்
சிலை திறப்பு விழா சிறப்புற வாழ்த்துகிறோம்.

சைக்கிள் உதிரிப்பாகங்கள்
இரசாயனப் பொருட்கள் விற்பனையாளர்

சு. சற்குணேஸ்வரன்

# மணி ஸ்ரோர்ஸ்

ஆவரங்கால்

" கற்றிலன் ஆயினும் கேட்க அஃது ஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை "

★ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலைக்கு பவளவிழா!
தங்க வைர நகைகட்கு நியூ லலிதா!

★ கல்விக்கு வித்தியாசாலை
அழகு நகை அணிய நியூ லலிதா

தரம் தாடுவோர் தவறாது நாடுமிடம்

# நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

74/1 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

" சுற்றத்தாற் சுற்றப்பட ஒழுகல் செல்வம்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். "

சரஸ்வதி வித்தியாசாலை பவளவிழா
சமயவித்தகர் குருக்கள் ஐயா சிலை
திறப்புவிழா சிறப்புடைய வாழ்த்துகிறோம்!

# வேலழகன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

பவளவிழா கண்ட
சரஸ்வதி வித்தியாசாலையை
வாழ்த்துகிறோம்.

பட்டுப் புடவை
பலவகை நைலெக்ஸ்
சேலைகள் . . .

ஒருமுறை நாடுங்கள்

## ★ குறொஸ் ★
## புடவை அகம்

2, புதிய சந்தை,

சுன்னாகம்

பவளவிழா
நிகழ்வதனை வாழ்த்துகிறோம்!

# கமல்நாதன்

## பலசரக்கு வியாபாரம்

10-ம் கட்டை, ஆவரங்கால்
புத்தூர்

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலைக்கு
பவளவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்

பவளவிழா—நிறுவனர் நினைவுவிழா
குருக்கள் சிலை திறப்பு விழா
சிறப்புற வாழ்த்துகிறோம்.



★ சைக்கிள்—சைக்கிள் உதிரிப்பாகங்கள்
விற்பனையாளர்,

# இ. சுப்பிரமணியம் அன் கோ.

8, காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

---

பவள விழா சிறப்புற
வாழ்த்துகம் வம்மின் !

எண்ணும் எழுத்தும்
கண்ணெனத் தகும்.

சி. சதானந்தன்

## சோபிதா
## எரிபொருள் விற்பனை நிலையம்

ஆவரங்கால்

---

கற்றோர்க்குச் சென்ற
இடமெல்லாம் சிறப்பு

பவள விழா சிறப்புற
நிகழ வாழ்த்துகிறோம்

★ பாடசாலைப் புத்தகங்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
விற்பனையாளர்கள்

## தாருகா புத்தகசாலை

பிரதான வீதி,
அச்சுவேலி.



''தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தற்கு
கற்றனைத்து ஊறும் அறிவு''

பவளவிழா நிறுவனர் நினைவுவிழா
குருக்கள் சிலை திறப்பு விழா
சிறப்புற வாழ்த்துகிறோம்.

★ நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு ★
சிறந்த ஸ்தாபனம்

# அருணா ஆபரண மாளிகை

AJ 177/B. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

பவளவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்

★ இயந்திரப்பட்டம் தங்கநகைகட்கு
இங்கிதம்தானே !

# சிவாஸ் T.K.S

இயந்திரப்பட்டம் வெட்டும்
வேலையகம்

*175 E, கஸ்தூரியார் வீதி,*
**யாழ்ப்பாணம்**

*176 / 01, கஸ்தூரியார் வீதி,*
**யாழ்ப்பாணம்**

---

கடவுள் ஒருவன் எங்கும் நிறைந்தவன்
— பாபா

பவளவிழா சிறப்புற
ஓம் ஸ்ரீ சாயிராம்

# இ. ஆனந்தமூர்த்தி
★ ஆனந்தா ★

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# நாவலர் வழியிற் சைவம் வளர்த்தசிவாச்சாரிய திலகம்
# சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

**கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்**
தலைவர், இந்து நாகரிகத் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஈழவள நாட்டிலே நாவலர் காட்டிய நன்னெறியிற் சைவம் வளர்த்த சான்றோர்களின் வரிசையில் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் (1886-1971) அவர்களுக்கும் சிறப்பிடம் உண்டு. சைவத்திற்கும் தமிழுக்கும் குருக்கள் அவர்கள் ஆற்றிய சீரிய தொண்டுகளைப் பாராட்டும் வகையில் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த சைவச் சான்றோர்கள் 1960 ஆம் ஆண்டு விழாவெடுத்து அவரை கௌரவித்ததோடு சிறந்ததொரு பாராட்டு மலரொன்றையும் வெளியிட்டுத் தமது உள்ளன்பை வெளிப்படுத்தியிருந்தனர். இந் நிகழ்வு சைவப்பெரு மக்களின் நன்றி மறவாத தன்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்தது. அத்துடன் அடுத்து வரும் தலைமுறையினரும் குருக்கள் அவர்களைப் போன்று சகல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்களாக மிளிர வேண்டும் என்ற உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தும் நிகழ்வாகவும் அது அமைந்தது. குருக்களின் பாராட்டு விழா மலரின் தலைவராக விளங்கிய ச. அம்பிகைபாகன் அவர்கள் தமது பதிப்புரையில் குருக்களைப் பற்றிய சிறந்ததொரு மதிப்பீட்டினையும் எழுதியிருந்தார்.

> குருக்கள் அவர்கள் ஈழநாட்டிலும் தமிழ்நாட்டிலும் சைவத்தையும் தமிழையும் வளர்த்த ஞானப்பிரகாச முனிவர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர், இலக்கணம் முத்துக்குமார தம்பிரான்போல் வேதாகமங்கள், சைவ சித்தாந்த சாத்திரங்கள், திருமுறைகள் முதலியவற்றைத் துறைபோகக் கற்றவர்கள். இதனாலேயே குருக்கள் அவர்கள் சைவசித்தாந்த உண்மைகளை மரபு பிறழாது எடுத்துரைக்க முடிகிறது. இதற்கு மேலாக அவர்கள் சைவக் கிரியைகளைப் பற்றிய அறிவிலும் அவற்றைச் செய்யும் திறனிலும் தலை சிறந்து விளங்குகிறார்கள்!

எனக் குறிப்பிட்டுள்ளமை இங்கு கவனிக்கத் தக்கது. குருக்கள் அவர்களது பல்துறை சார்ந்த ஆற்றல்களைக் கோடிட்டுக் காட்டும் சொற்களே அவை.

இளம் வயதிலிருந்தே குருக்கள் அவர்கள் கல்வியில் ஊக்கம் காட்டியதோடு கற்கவேண்டிய மரபுவழி நூல்களையும் சாத்திரங்களையும் முறைப்படி குருகுல பாரம்பரியத்தின்படி கற்று தமது அறிவினை வளம் படுத்திக் கொண்டார். கற்றதோடமையாது தாம் பெற்ற ஞானம் மற்றவர்களுக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கில் சமஸ்கிருத நூல்களையும் தமிழ் நூல்களையும் எழுதிவெளியிட்டு சைவ உலகுக்கு அரும் பெரும் தொண்டாற்றியவர் குருக்கள். இவருக்கு அதிகச் சிறப்பைக் கொடுத்தது சைவக்கிரியைகளிலும் ஆகம மரபு சார்ந்த விடயங்களிலும் அவருக்கிருந்த அறிவாகும். கிரியைகள் பற்றிய தெளிவான விளக்கத்தினைப் பெற்றிருந்த காரணத்தினாலேயே மற்றவர்கள் நயந்து பாராட்டும் வகையிலும் பயன்பெறத்தக்க வகையிலும் அவற்றை அவரால் செவ்வனே செய்ய முடிந்தது. குருக்கள் அவர்கள் நிறுவிய அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை இன்று பவள விழா காணும் பெருமை பெற்றுள்ளது. இப்பாடசாலையை நிறுவிய தொண்டின் மூலம் இவரது பரந்த உள்ளத்தையும் சைவக் கல்வியில் அவர்கொண்ட அபிமானத்தையும் நாம் உணர முடிகின்றது.

நாவலர் அவர்கள் 1860ஆம் ஆண்டிலே சிதம்பரத்திலே சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயருடைய கல்விக்கூடம் ஒன்றை நிறுவும் எண்ணத்தை ஒரு வேண்டுகோள் வாயிலாக விளக்கியிருந்தார். அதன் கண் சமய ஒழுக்கத்தை மிகவும் வற்புறுத்திக் காட்டிய அறிவுரைகள் பாராட்டிற்குரியன.

> யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகிறவன் அந்த சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கமில்லாதபோது பயன்பெறான். அந்த சமயத்திற்குரிய கடவுள் இவரென்பதும் அவருடைய இலக்கணங்களும் அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும் விலக்கப்பட்ட பாவங்களும் அந்தப் புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுகதுக்கங்களும் அவரை வழிபடும் முறைமையும் அந்த வழிபாட்டினாலே பெறப்படும் நன்மையும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாத போது அந்த ஒழுக்கம் உண்டாகாது சற்குரு முகமாக விதிப்படி பெறப்படும் சமய நூற்கல்வி கேள்விகள் இல்லாத பொழுது அந்த அறிவு உதியாது. ஆதலால் கல்வியும் அறிவும் ஒழுக்கமுமாகிய மூன்றும் வேண்டும்.

இந்த அறிவுரை சைவசமயத்தைச் சார்ந்த ஒவ்வொருவருக்கும் தேவையானதொன்றாகும். பிறவியென்னும் பெருங்கடலில் அழுந்தாது கரை சேர்வதற்கு சமயக்கல்வி அனைவருக்கும் இன்றியமையாது வேண்டற்பாலதாகும். இந்த அறிவுரையைத் தமது வாழ்

வில் சடைப்பிடித்த பெருமைக் குரியவர்களில் குருக்களும் ஒருவராவர்.

குருக்கள் மேற்கொண்ட பணிகளில் வேதாகமக் கல்வியை விருத்தி செய்தல், மற்றவர்களுக்குப் பயன்படத்தக்க அறிவு நூல்களை விரித்துரைத்தல், பள்ளிக்கூடம் கட்டுதல் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இத்தகைய பணிகளின் சிறப்புப் பற்றி நாவலர் ஏற்கனவே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> வேதாகமங்களை ஓதுதலும் அறிவு நூல்களைப் பிறருக்கு விரித்து உணர்த்துதலும் தருமங்களை எடுத்துப் போதித்தலும் பள்ளிக்கூடங் கட்டுதலும் பெரும் புண்ணியங்கள் என்பது ஞானாமிர்தம் எனும் நூலில் வகுத்துச் சொல்லப்பட்டது. எல்லாத் தருமங்களையும் அறிந்து பயன் பெறுவதற்குச் சமய நூலுணர்ச்சியே ஏதுவாதலால் சமய நூலுணர்ச்சியை வளர்த்தலாகிய தருமமே எல்லாத் தருமங்களிலும் மேலானது. ஆதலால் நமது தமிழ் நாடெங்கும் பாடசாலைகளை நிறுவிப் பிள்ளைகளுக்குச் சமய நூல்களையும் பொருளீட்டுதற்கு வேண்டும் உலகியல் நூல்களையும் கற்பித்தலும் திருக்கோயில்தோறும் மக்களுக்குச் சமயநெறியைப் போதித்தலும் மிக மேலாகிய புண்ணியங்களாம்.

நாவலரது இந்த நன்மொழிகள் மக்களை அறச் செயலில் தூண்டும் சிறப்புப் பெற்றவை. இவ்வாறு சிவ கைங்கரியத்தில் ஈடுபட மக்களுக்கு ஒரு வழிகாட்டியாக நாவலர் விளங்கினார். இவ்வழியில் தமது சமயப் பணியைத் தொடங்கிய குருக்கள் அவர்கள் 1911 ஆம் ஆண்டு முதல் பல வருடங்கள் தமது இல்லத்தில் அந்தணச் சிறுவர்களுக்கும் சைவப்பிள்ளைகளுக்கும் தமிழிலும் சங்கதத்திலும் சமய நூல்களையும் நீதிநூல்களையும் கருவி நூல்களையும் கற்பித்து வந்தார். குருக்களது பாடசாலைப் பணியில் சிறப்பிடம் பெறுவது 1918ல் அச்சுவேலிப் பிள்ளையார் கோயில் மேலை வீதியில் அவர் ஆரம்பித்த சரஸ்வதி வித்தியாசாலை என்ற சைவ வித்தியாசாலையாகும். இதனை ஆரம்பித்து வைத்ததோடு அதனைத் திறம்பட நடாத்தியும் வந்தார். அந்த ஆசிரியராகவும் 1928 வரை கடமைபுரிந்த பெருமை இவருக்குண்டு. அவரது ஆசிரியப் பணி வேறு வகைகளிலும் சிறப்படைந்தது. பல்வேறு குருகுலங்களில் கல்வி போதித்து அரும் பணியாற்றினார். சிவாச்சாரியர்களது அறிவை மேம்படுத்துவதில் இவர்காட்டிய ஊக்கம் குறிப்பிடற்பாலது. இக் குருகுலங்களில் சிவாகமங்களையும் பத்ததிகளையும் போதித்து சிவாச்சாரிய சான்றோனாகத் திகழ்ந்தார். சைவபரிபாலன சபையினர் நடாத்திய குருகுலத்தில் ஆசிரியர்ப்பணி, திருக்கேதீச்சரத்தில் சிவானந்த குருகுலத்தின் பிரதம குருவாக இருந்து ஆற்றிய பணி, நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடாத்தப்பட்ட வேதாகமப் பாடசாலைத் தொண்டுகள் ஆகியவை இங்கு குறிப்பிடற்பாலன.

இவரது பெருமுயற்சியினால் மருதங்கேணியிலும் மற்றோரிடத்திலும் சைவப் பள்ளிக்கூடங்கள் நிறுவப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வேதாகமங்கள் சார்ந்த அறிவு விளக்கத்திற்கு குருக்கள் அளப்பரிய சேவைபுரிந்தார். இம்மரபு தொடர்ந்து பேணப்படவும் அவைதொடர்பான நூல்கள் அழியாது பாதுகாக்கப்படவும் அவர் பெரும் கவனம் செலுத்தினார். வேதாகமங்கள், சைவத் திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள் ஆகியவற்றைக் கற்றுத்தேர்ந்த குருக்கள் சமஸ்கிருத மொழி, தமிழ் மொழி ஆகியவற்றை ஒப்பநோக்கி ஆராயும் பக்குவமுடையவராக விளங்கினார். இதன் பயனாய் ஆகம மரபு சார்ந்த வழிபாட்டு முறைகளுக்கு உதவக்கூடிய பல நூல்களை ஆக்கிபளித்தார். சைவசமய மரபினை முறையாகக் கற்று உணரக்கூடிய வகையில் பல நூல்களை இயற்றினார். இந்நூல்கள் சிவாச்சாரியர்களுக்கும் இளஞ் சிவாச்சாரியர்களுக்கும் குருகுலங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் சைவ மக்களுக்கும் சைவத்தின் அடிப்படைகளை அறிய பெரிதும் துணை புரியக்கூடியன. சைவசித்தாந்த உண்மைகளை மரபு பிறழாது எடுத்துரைப்பதில் குருக்கள் வல்லவராக விளங்கினார். இவ்வகையில் ஈழத்துச் சிவாச்சாரிய மரபுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கியவர் சிவஸ்ரீ குருக்கள் அவர்கள். நாவலர் வழியில் சைவ சமயத்தை வளர்த்துச்சென்ற பெருமைக்குரியவராகவும் விளங்கினார்.

குருக்கள் அவர்கள் இந்தியா சென்று பல தலங்களைத் தரிசித்து தமது சமய அனுபவங்களை வளர்த்துக் கொண்டார். அங்குள்ள பல ஆதீனங்களுக்குச் சென்றபொழுது அவருக்கு அங்குள்ள பெரியோர்களால் உரிய கௌரவம் வழங்கப்பட்டமை அவரது அறிவின் சிறப்புக்குச் சான்றாக அமைகின்றது. சைவ சமயக் கிரியை நூல்களை உருவாக்கும் கைங்கரியத்தில் தமிழக சிவாச்சாரியர்களுடன் தொடர்புகொண்டு செயலாற்றியவர் குருக்கள் அவர்கள். கண்டனூர் அ.நா. இராமநாதக் குருக்கள் சைவாகம நூற் பரிசோதனைகளில் இவரோடு ஒத்துழைக்கும் கைங்கரியம் பூண்டவர். மற்றும் தமிழக ஆதீன வித்துவான்களும் இவரது நூல் இயற்றும் முயற்சிகளை அருமையாகப் பாராட்டியுள்ளனர். ஆகவே இவரது நூல் இயற்றும் பணி தரமுள்ள நூல்களை வெளியிடும் பணியாகச் சிறப்படைந்தது.

குருக்கள் அவர்கள் எழுதிய ஆகம மரபுசார்ந்த நூல்கள் சிவாச்சாரியர்களுக்கு ஆலயக்கிரியைகளைச் செய்வதற்கு பெரிதும் வழிகாட்டியாக அமைந்தன. குருக்கள் எழுதிய நூல்களுள் ஒன்றாகிய விநாயகமாத்துவம் (1934) விநாயகரது தெய்வீகப் பெருமைகளைத் தொகுத்துக் கூறும் நூலாகும். சிவஸ்ரீ குருக்கள் எழுதிய சைவப்பிரகாசிகை (5 பாகங்கள்), சிவபூசை விளக்கம் (1928) மகோற்சவ சந்திரிகை (1932), சிராத்ததீபிகை(1933), புவனேசுவரிமகத்துவம் (1934)

வேதாகம நிருபணம் I (1950), வேதாகம நிருபணம் II 1951), நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் சரித்திரம் (1954), முப்பொருள் விளக்கம் (1955) சிவபூசா விதி (1956), மகோற்சவ விளக்கம் (1958) மூர்த்தியலங்காரம் (1968), சைவாசாலப்பகுப்பு (1968). என்பன தமிழிலே எழுதப்பட்ட நூல்களாகும். சிவபூசையின் உட்பொருளைத் தெளிவாக எடுத்துக் கூறுவது சிவபூசை விளக்கம் என்ற நூலாகும். ஆலயங்களில் நிகழும் மகோற்சவத்தின் பல்வேறு விளக்கங்களை பிரமாணங்களுடன் எடுத்துக்கூறுவது மகோற்சவவிளக்கம என்ற நூலாகும். அபரக்கிரியைகளின் முக்கியத்துவத்தினையும் பல்வேறு விளக்கங்களையும் எடுத்துக் கூறுவது சிரார்த்தநீதிபிகையாகும். மற்றும் அச்சுவேலி சித்தி விநாயகர்மீது பாடிய ஊஞ்சலும் (1915) குறிப்பிடத்தக்கதாகும்.

சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டவற்றுள் சிவாகம சேகம்ர பிரட்டாவிதி I (1949) சிவலிங்கபிரதிஷ்டாவிதி II, சுப்பிரமணியபிரதிட்டாவிதி, அக்கினிகார்யவிதி 1964 நைதி சந்நியாவந்தனவிதி (1960), சைவசிரார்த்தவிதி (1965, உபரவபிரதிட்டாவிதி (1958) என்பன சில. இத்தகைய நூல்கள் திருக்கோயில் வழிபாட்டு மரபினைப் பேணவும் சிறந்த சைவவாழ்க்கை வாழவும் வழிவகுப்பன. கரணவாய் சைவ ஆராய்ச்சிச் சங்கத்தினரின் ஆதரவுடன் குருக்கள் எழுதிய நூலாகிய வேதாகம நிருபணம் (I. 1950), (II. 1951) இவரது சமய அனுபவ முதிர்ச்சியையும் அறிவையும் அளவிடப் போதுமானதாகும். வேதசிவாகமங்களே சுத்தாத்துவித சைவத்தின் முதநூல்கள் என நுண்ணிய ஆராய்ச்சித் திறனுடன் எழுதிய நூலே இதுவாகும். நாவலரும் (சங்கர) பண்டிதரும் தருத்தி வைத்த பரம்பரையே நம் நாட்டில் இன்று சைவத்தைப் புரந்து வருகின்றது எனக் குருக்கள் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாவலர் வழி நின்று சைவசமயத்தை மக்களுக்குத் தெளிவாக உணர்த்தும் வகையில் குருக்கள் அவர்கள் நடாத்திய சஞ்சிகை சைவசாஸ்திர பரிபாலனம் ஆகும். 'பழைய வைதிக சைவம் பரக்கவே' என்ற மேற்கோளை தாங்கிச் சமய சம்பந்தமான வெளியீடாக இது திகழ்ந்தது. தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் வாழ்ந்த பெரியார்கள் பலரின் ஆதரவைப் பெற்று விளங்கியது இச்சஞ்சிகை. சைவசாஸ்திர உண்மைகளை விளக்கிக் கூறுவதையும் சைவநூல்களில் உள்ள விடயங்களைத் தருவதும் இச்சஞ்சிகையின் முக்கிய நோக்கமாக அமைந்தது. நாவலர் காட்டிய வழியில் சைவக் கொள்கைகளைப் பரப்ப குருக்கள் அவர்கள் பத்திரிகை சாதனத்தை நன்கு பயன்படுத்தினார். வேதாகம சைவசித்தாந்த சபையினர் வெளியிட்ட 'ஆறுமுக நாவலர்' என்ற பத்திரிகையின் ஆசிரியப் பணிமூலம் நாவலரின் கொள்கைகளை சைவ உலகுக்கு அறிமுகப்படுத்தினார். இவ்வகையில் இந்நூற்றாண்டிலே நாவலரின் இலட்சியங்களை நிறைவேற்றுவதில் தம்மை அர்ப்பணித்த ஒருவராக சிவஸ்ரீ குருக்கள் விளங்கினார்.

சிவாச்சாரியருக்குரிய சகல தகைமைகளையும் கொண்ட குருக்கள் அவர்கள் சாதனை வழியிலும் புகழடைந்தார் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களிலும் இலங்கையின் ஏனைய இடங்களில் உள்ள ஆலயங்களிலும் நைமித்திகக் கிரியைகளைச் செய்வனே நடாத்திப் புகழடைந்தார். ஆலய அமைப்பு, விக்கிரக அமைப்பு ஆகிய துறைகளில் குருக்கள் போதிய அனுபவம் பெற்றுத் திகழ்ந்தார். திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைக்கு வேதாகம வழுவின்றி ஆலயபுனருத்தாரண பணிநடை பெற நல்ல ஆலோசனைகளை வழங்கியதையும் நினைவு கூர்தல் அவசியமாகும். குருக்களவர்களின் சிவாகமப் புலமையையும் கிரியைத் துறையில் அவருக்குள்ள ஆற்றலையும் பாராட்டும் வகையில்மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் அவருக்கு 'சிவாகமஞானபானு' என்ற பட்டத்தைச் சூட்டி கௌரவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது 1972 ஆம் ஆண்டு இந்துசாதனத்தில் வெளிவந்தவற்றைத் தொகுத்து 'கதிர்காமமான்மியம்' என்ற பெயரில் வெளியிட்டபொழுது பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அளித்த அணிந்துரையில்,

> "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களையும் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் அவர்களையும் பின்பற்றி பரபு பிறழாது நூலுரைகள் செய்து உபகரித்தவர்கள் குருக்கள் அவர்கள். சிவாலயக் கிரியைகள், விரத நிர்ணயங்கள் முதலிய சமய காரியங்களிற் கலக்கமுறுங் காலங்களில் ஒரு கலங்கரை விளக்காய்த் தெளிவு செய்து வந்தவர்கள் குருக்கள் அவர்கள்"

எனப் பாராட்டியுள்ளார். இக்கூற்று அவரது புலமைக்குரிய உரை கல்லாகும்.

சிவாச்சாரியத் திலகமாக, நல்லாசிரியனாக, வேதாகம விற்பன்னராக, பாடசாலை நிறுவுனராக, நூலாசிரியனாக, சைவத்தின் காவலனாக குருக்கள் சிறந்து விளங்கினார், நாவலர் பேணிப் பாதுகாத்த சைவஞானச்சுடர் அணைந்து விடாது ஒளியுடன் திகழ குருக்கள் திரிகரண சுத்தியுடன் ஆற்றிய பணிகள் பெரிதும் காரணமாக அமைந்தன. சைவ உலகு அவரது பணிகளால் பெரும்பயனடைந்தது. தமிழகத்தில் ஈழத்து அறிஞரது பெருமை பரவவும் அவரது பணிகள் துணைநின்றன. தமிழகத்தினதும் ஈழத்தினதும் அறிஞர்களிடையே ஓர் இணைப்புப் பாலமாகக் குருக்கள் விளங்கினார். திருக்கேதீச்சர திருப்பணிச்சபைத் தலைவராகப் பணிபுரிந்த சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் குருக்களின்

திறமைசாலிகளை மதிப்பிடும் வகையில் குருக்களின் பாராட்டு விழா மலரில் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் மனங்கொள்ளத்தக்கவை.

> வேதாகமம், பன்னிரு திருமுறை, மெய்கண்ட சாத்திரம், முதலாம் சைவசித்தாந்த நூல்களுக்கு விளக்கமும் அருள் உரையும் பகர்வதில் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பெருமை தந்த பெருமான் ஆவர். அங்ஙனமே இருபதாம் நூற்றாண்டுக்குப் பெருமை அளித்து வருபவருள் சிவஸ்ரீ, ச. குமாரசுவாமிக் குருக்கள் தலைசிறந்து விளங்குகிறாரெனக் கூறுவது மிகையாகாது.

என்ற குறிப்பு குருக்களின் பெருமையை எமக்கு உணர்த்துகின்றது.

> 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்'

என்ற வள்ளுவரது குறளுக்கேற்ப குருக்கள் தமது காலத்தில் நாவலர் வழிநின்று ஆற்றிய சைவப்பணி எம் அனைவருக்கும் சிறப்பாகச் சிவாச்சாரியர்களுக்கு ஒரு நல்ல முன் மாதிரியாக உள்ளது எனக் கூறின் மிகையில்லை. அவர் நிறுவிய அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை பவள விழா (1918 — 1994) கொண்டாடும் இவ்வேளை, இப்பெரியாரின் தூய்மையான சைவப்பணியின் பெருமைகளை இளம் தலைமுறையினர்க்கு உணர வைப்பது எம்மவரின் கடமையாகும்.

# பசுவின் சிறப்பு

சங்கீதவித்வான் வைதிகசிரோமணி
சே. ந. நடராஜ சர்மா
(இசை ஆசிரியர்)

## ஓம் மகாகணபதயே நம:

இந்து சமயம் தொன்மை மிக்கது என்பது மட்டுமன்றி, உலகில் அனைத்து உயிர்களும் நலமுடன் இன்புற்று வாழ வழிகாட்டுவதாக உள்ளது.

இந்து சமயத்தில் நமது சிந்தனைக்குரியதாகவும் உயரிய நிலையில் வைத்துப் போற்றி வணங்கப்படுவதாகவும், மிகவும் சாதுவான பிராணியாகவும் பசுமாடு விளங்குகிறது. இந்தப் பிராணியின் தொடர்பு இன்றி எந்தவொரு இந்து சமய நிகழ்ச்சியும் நிறைவு பெற மாட்டாது.

ஆலயமாயினும், தனிமனிதன் வீடாயினும், வேறு எவ்விடமாயினும் அங்கு நடைபெறும் சமய நிகழ்ச்சிகளில் பசு என்னும் பிராணிக்கு மிகவும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது. வேதங்களிலேயே இதற்கு மிகவும் சிறப்புக் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

இந்து சமய நிகழ்ச்சிகளில், எப்பொழுதும் அதன் ஒரு அங்கமாக விளங்குவது அதன் இறுதியில் சான்றோர்களால் கூறப்படும் ''ஸ்வஸ்திவாசம்'' அல்லது ''ஸ்வஸ்திமங்களம்'' எனப்படும் வடமொழியிலமைந்த பின்வரும் பெரும் வாழ்த்து ஆகும்.

''ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம்
ந்யாய்யேன மார்கேண மஹிம் மஹீசா:
கோப்ராஹ்மணேப்யஸ் சுபமஸ்து
நித்யம் லோகாஸ் ஸாமஸ்தாஸ் ஸுகினோ பவந்து''

## இதன் பொருள்:-

மக்களுக்கு நலமுண்டாகட்டும். தேசத்தை அரசர்கள் நீதிவழுவாது ஆண்டு வரட்டும். ஆவினமும் (பசுக்களும்) அந்தணர்களும் (அறவோர்) என்றும் நலமுடன் வாழட்டும். உலகிலுள்ளோர் அனைவரும் எப்பொழுதும் மகிழ்ச்சியுள்ளவர்களாக இருக்கட்டும் (ஆகட்டும்).

ஈசன் அருள் பெற்ற இளங்கன்றெனப் போற்றப்படும் காழியர் கோனாகிய திருஞானசம்பந்தப் பெருமானது உள்ளத்தெழுந்த திருவாக்கும் இதுவே.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்,
வீழ்க தண்புனல், வேந்தனும் ஓங்குக,
ஆழ்க தீயதெல்லாம், அரன் நாமமே,
சூழ்க, வையகமும் துயர் தீர்கவே.

எனப்பாடியுள்ளார் அவர்.

உலக நன்மையைக் கருத்தில் கொண்டவர்களாகிய இந்து சமயத்தவர் ஆவினத்தின் பெருமைகளைத் தங்கள் பாடல்களில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். உலகின் சிறப்பிற்கு ''நீங்காத செல்வமாக,'' ''வாங்கக் குடம் நிறைக்கும்'' பெரும் வள்ளல்களாக பசுவைக்குறித்துப் பாடியுள்ளார் பாவை பாடிய ஆண்டாள் நாச்சியார். பசு என்னும் பிராணியிடமிருந்து மக்கள் அடைகின்ற நன்மைகளைக் கருதியே அநாதிகாலந் தொட்டு அது போற்றப்பட்டு வந்துள்ளது. சமயம், பொருளாதாரம், விஞ்ஞானம், சுகாதாரம், மருத்துவம் என்று பல கோணங்களில் முன்னோர்களாகிய முனிவர்கள் ஆராய்ந்து உண்மை கண்டவர்கள். பசுவின் சிறப்புப்பற்றிய அவர்களது கூற்றுக்கள் மறுக்க முடியாதவைகளாக உள்ளன.

## பசுவின் தோற்றம்

தேவர்களும் அசுரர்களும் அமுதத்தைப் பெறும் பொருட்டு பாற்கடலைக் கடைந்த பொழுது அதிலிருந்து பசுவும் தோன்றியது என வரலாறு கூறுகிறது.

## பெயர் விளக்கம்

பசு என்பது வடமொழியில் ''கோ'' என்னும் சொல்லால் குறிப்பிடப்படுகின்றது. இச்சொல்லின் பொருள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது.

''சிறப்பு மிக்க எந்த ஒன்றின் உதவியினைக் கொண்டு வேள்விகளை நடத்தவும், வெகுமதிகள் வழங்கவும், ஒருவருக்கொருவர் உதவிகளைப் பெறவும், நற்பலன்களைப் பெறவும் முடிகிறதோ அந்த ஒன்றே ''கோ'' எனப்பெயர் பெறுகிறது.''

''யாஸ்கர் என்பவரால் எழுதப்பட்ட ''நிருக்தம்'' என்பது வேதங்களின் ஆறு அங்கங்களில் ஒன்றாகும். அதில் பசுவிற்கு ஒன்பது பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் அவற்றின் சிறப்பின் காரணமாக ஏற்பட்ட பெயர்கள் என அறியமுடிகிறது. அவற்றுள் முதலாவது பெயர் ''அக்நியா'' எனக் கூறப்பட்டுள்ளது. அதாவது ''கொல்லத் தகாதது'' (கொல்லக்கூடாதது) என்ற பொருளுடையதாக இது விளங்குகிறது. ''கோ'' எனப்படும் பசுவைப்பற்றிய மிகவும் கருத்துள்ள விபரம் வேத இலக்கியத்தில் காணப்படுகிறது.

ஏதோ ஒரு கற்ப காலத்தில் பிரமதேவன் முதலில் உயிரற்ற பொருட்களைப் படைத்தார். பின்னர் உயிருள்ளவைகளைப் படைக்க எண்ணங் கொண்டார். அதற்காக மானசிகமாக ஒரு (வேள்வியை)

ஹோமத்தைச் செய்தார். அதிலிருந்து அக்கினி, வாயு, ஆதித்யன் ஆகிய மூவரும் தோன்றினர். ஆறுவகை அறிவும் பெற்றிருந்த இவர்கள் தங்களது தோற்றத்தைப் பற்றி நன்கு அறிந்து கொண்டவர் தாங்களும் புதிய ஓர் உயிரினத்தை தோற்றுவிக்க எண்ணினார்கள். இதன் பொருட்டு பிரஜாபதியைப் போல தாங்களும், மானஸிகமாக ஒவ்வொருவரும் ஹோமம் செய்தனர். அதிலிருந்து ஓர் புதிய பிராணி தோன்றியது. அக்கினியின் மூலம் உயிரும், வாயுவினால் சரீரமும், ஆதித்தியனால் புலன்களும் பெற்று விளங்கிய இந்தப்பிராணிதான் நாம் அறிகின்ற "கோ" எனப்படும் பசுவாகும்.

மூவரது அம்சமாகத் தோன்றிய பசுவிற்கு "அக்னிஹோத்ரி" என்ற பெயர் வழங்குவதும், குறிப்பிடத்தக்கது. அக்கினியின் காரணமாக வேள்விகளிலும் ஹோமத்திலும் ஹவிர்பாகத்தை அக்னிக்கு இரவிலும், ஆதித்தனுக்குப் பகலிலும், வாயுவிற்கு "வாதாயஸ்வாஹா" என்னும் மந்திரத்துடன் அளிப்பதும் இன்றும் வழக்கில் உள்ளன.

"ருத்திரர்களின் தாய்", "வசுக்களின் பெண்" "ஆதித்யர்களின் உடன் பிறந்தாள்" "அமிருதத்தின் இருப்பிடம்" என்றெல்லாம் ரிக்வேதம் பசுவை போற்றுகிறது.

"கொல்லத்தகாதவைகளான பசுக்கள் புற்களை நிறைய மேய்ந்து உண்டு, மிகுதியான பாலைத்தந்து அதன் மூலம் வேள்விகளில் ஹவிர் பாகத்திற்கு உதவ வேண்டும் என யஜுர்வேதம் ஆணையிடுகிறது.

ரிக்வேதம் மக்களுக்குரியதான செல்வமாக இதைக் குறிப்பிட்டு "காலைப் பசுக்களைக் காப்பாற்றி மக்கள் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். ஒருபோதும் பசுக்களைக் கொல்ல வேண்டாம் எனவும் ஆணையிடுகிறது.

## சாஸ்திரங்களும் புராணங்களும்

1) பெற்றெடுத்ததாய்,
2) குருவின்மனைவி,
3) பிராமணர் மனைவி
4) அரசனது மனைவி,
5) பசு (கோ)
6) நோயாளருக்குப்பணி புரியும் தாதி,
7) பூமி, ஆகியவற்றை ஏழு தாய் மார்கள் (சப்த மாதா;) என உரிய இடத்தில் வரிசைப்படுத்திக் கூறுகின்றன.

மகா பாரதம் "பசுக்கள் சொர்க்கத்திற்கு இட்டுச் செல்லும் ஏணி" எனவும், "பசுக்கள் சொர்க்கத்திலேயே பூஜிக்கப்படுகின்றன" என்றும் விளக்குகிறது.

கபிஜாதர் என்ற முனிவர் "அந்தணர்களும் பசுக்களும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள்" என்றும், "அந்தணர்களிடம் (வேள்விக்கான) மந்திரங்களும் பசுக்களிடம் (வேள்வியில் தேவைப்படும்) ஹவிர் பாகமும் (பாலும்) இருப்பதால் அவர்கள் இரண்டாகப் பேசப்படுகின்றனர்" எனவும் கூறியுள்ளார்.

மகரிஷிகளில் மிகவும் பெருமைக்குரியவரான சியவனர் என்பவர் ஜலத்தில் வசித்த காலத்தில் செம்படவர்கள் வலையில் சிக்கி விட்டார். அவர்களது உடமை பொருளுக்குத்தான் ஆளாகிவிட்டதால் தான் விடுபட வேண்டி தன்னை விலை கொடுத்து வாங்கும்படி நகுஷன் என்ற மன்னவனிடம் கூறினார். நகுஷன் அம்முனிவரின் பெறுமதியாகத் தன் இராஜ்ஜியத்தில் பாதியைக்கூடத்தரச் சம்மதித்தார். சியவனரின் பெறுமதிக்குரியதும் ஈடானது மட்டுமன்றி உயர்ந்ததாக பசு கருதப்பட்டு அதைக் கொடுத்தே சியவனர் விடுவிக்கப்பட்டதாக மகாபாரதம் கூறுகிறது. கபிஜாதரின் கூற்றுப்படியே இது நிகழ்ந்ததாகக் காணப்படுகிறது.

"உயிரினங்களின் தாய்" என பசுவுக்குப்பெருமை கொடுத்துள்ளது. பசுவை அனைவரும் வணங்க வேண்டும். திருமால் கிருஷ்ணாவதாரத்தில் பசுவின் பெருமையை எடுத்துக் காட்டுவதற்காகவே, கோபாலன், கோவிந்தன் எனப் பெயர்தாங்கி லீலைகள் புரிந்தார்.

தேவலோகத்திற்குரிய பசு "காமதேநு" என்று புராணங்கள் கூறுவதை நாம் கவனிக்க வேண்டும். "காமதேநு" என்றால் விரும்பியதையெல்லாம் கொடுக்கும் பசு என்பதையே குறிக்கும். காமதேநுவின் உடலிலேயே முப்பத்து முக்கோடி தேவர்களும் வாசம் செய்கின்றனர்" என்றும் கூறப்பட்டுள்ளது.

"பசுவின் உடலில் சூரிய சந்திரர்களும், உத்தர-தக்ஷிண அயனங்களும், புனித தீர்த்தங்களும், விண்மீன்களும், தர்மதேவதையும், பதினான்கு வித்தைகளும் சரஸ்வதி, லக்ஷ்மிதேவியரும், கந்தர்வரும் நாகர்களும் மருத்துக்களும் வசிக்கின்றனர்" என்று வராக புராணம் கூறுகிறது.

நீண்ட ஆயுளுடன் வாழவிரும்புவோர் தினமும் தரிசித்து வணங்க வேண்டிய மங்கலப்பொருள்கள் (அஷ்ட (மங்களானி) பின்வருவன ஆகும்:

1) அந்தணர் 2) பசு 3) அக்நி
4) தங்கம் 5) வெண்ணெய்

6) சூரியன் 7) தண்ணீர் 8) அரசன்

பசுவிற்கு ஈடான உயர்ந்த பொருள் உலகில் இல்லை என்பது சமயம் கூறும் உண்மைகளில் ஒன்று. சியவன ரிஷியின் வரலாறு இதற்குச் சான்று பகர்ந்துள்ளது.

வேதவேள்விகள் நடந்த காலத்தில் அவ்வேள்விகளில் பங்குபற்றிய புரோஹிதர்களுக்கு அளிக்கப்பட்ட வெகுமதி(HONOURARIUM) பசுமாடுகளின் அளவுகளாகவே கணக்கிடப்பட்டது. அதர்வ வேதத்தின்படி "தக்ஷிணா" (தட்சிணை) என்னும் சொல் முதன் முதலில் ஒரு பசுவையே குறித்ததாக

ஆதாரம் உள்ளது. பசுக்களின் அளவே முற்காலத்தில் தனிமனிதர் ஒருவரது அல்லது ஒரு நாட்டின் செல்வத்தை எடுத்து காட்டவும் மதிப்பிடவும் காரணமானதாக இருந்தது என்று இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

பிற்காலத்தில் பசு என்னும் செல்வத்தின் எண்ணிக்கைகள் குறைய நேர்ந்ததால் பசுவை வெகுமதியாகக்கொடுக்க முடியாத நிலை உருவாயிற்று. எனவே அதற்குப் பதிலாக பொன்னும், காலப்போக்கில் பின்னர் நாணயங்களும் அளிக்கப்படும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. எனவே 'தட்சிணை' என்னும் சொல் பணத்தைக் குறிப்பதாக வழக்கிற்கு வந்தது.

பசுவிடமிருந்து பெறப்படுவதால் கிடைக்கும் பால், நெய், தயிர், சாணம், கழிவுநீர் எனப்படும் ஐந்து பொருட்களுடன் நீரையும் குறிப்பிட்ட அளவில் சேர்த்த கலவைக்கு ''பஞ்சகவ்வியம்'' என்று பெயர். இது சமய நிகழ்ச்சிகளில் இன்றியமையாத ஒரு பொருளாகும். பசுவின் சாணத்திலிருந்து பெறப்படும் திருநீற்றின் பெருமை சொல்லவொண்ணாதது.

''மந்திரமாவது நீறு''

எனத் தொடங்கும் தேவாரமே இதற்குச் சான்றாகும்.

பசுவைப்பேணி வளர்த்தல், வழிபடுதல், வலம் வருதல், அதை தானமாக வழங்குதல், வதைக்காமல் காப்பாற்றுதல் நாட்டிற்கு எல்லையில்லாத நன்மைகளைப் பெற்றுத்தரும் என்பதில் யாதொரு தடையும் மறுப்பும் கிடையாது. ஆவின் பெருமையை நன்கு உணர்ந்த திருவள்ளுவர் வாக்கு வருமாறு:

''ஆ பயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்,
காவலன் காவானெனின்''

காவலனாகிய அரசன் நெறியாட்சி செய்யவேண்டும். செய்யாவிடில் பசுவினால் வரும் பயன் குன்றும் (பால் கிடைக்காது) அறுதொழிலோராகிய அந்தணர் வேதத்தை (வேதமந்திரங்களை) மறப்பர்.

எனவே வேதவேள்விகள் நடைபெறாது சமய நெறி கெட்டு தீமை விளையும் என்பதை இது வலியுறுத்துகிறது.

சண்டேசுர நாயனாரின் பெருமையைக் கூற வந்த சேக்கிழார்பெருமான் 'ஆவின் பெருமை உள்ளபடி அறிந்தார் ஆயர்க்கருள் செய்தார்'' எனக் கூறி ஆவின் பெருமையையும் சேர்த்து விளக்கியுள்ளார். பசுவை நீக்கி நாம் எம் சமயத்தைப் பற்றிச் சிந்தித்துப்பார்க்கவே முடியாது.

''ஆ காத்தோம்பி ஆப்பயனளிக்கும் கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடில்லை'' எனச் சிலப்பதிகாரம் சிறப்புறக் கூறுகிறது.

திருமூலர் பசுக்களைக் காக்கவே ஒரு பொறுப்பினைத் தானே ஏற்றுக் கொண்டதை நாம் அறிவோம்.

ஆவினம் வாழவும், கொல்லப்படுவதைத் தடுக்கவும், அனைத்துலகும் நலமுடன் வாழவும் எம் சமயத்தவர் அனைவரும் கடமை உணர்வுடன் பசுவினத்திற்காக வேண்டியவற்றைச் செய்வோமாக

சுபமஸ்து

# எமது பாடசாலையும் சூழவுள்ள ஆலயங்களும்

செல்வி ச. சாந்தினி - ஆசிரியை

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்” என்னும் ஆன்றோர் வாக்கிற்கிணங்க மனித வாழ்க்கையை மேம்படுத்தி ஒவ்வொரு மனிதனும் மனிதனாக விளங்கவேண்டும் என்பதற்காக கல்விக்கூடங்கள் அமைக்கப்பட்டன. அதற்கமைவாக அச்சுவேலியில் அமைந்துள்ள பல பாடசாலைகளுள் எமது பாடசாலையும் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் ஐயா அவர்களினால் 1918 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

“சரஸ்வதி வித்தியாலயம்” எனப்பெயர் கொண்ட இப்பாடசாலையானது முன்புறமாக பச்சைப் பசேலென வயல்வெளிகள் காட்சிதர உலவிக்குள சித்திவிநாயகர் ஆலயம் அமைந்திருப்பது அச்சுவேலியின் கண் அமைந்துள்ள எந்தப்பாடசாலைக்கும் இல்லாத சிறப்பம்சமாகும்.

“பிள்ளையார் சுழிபோட்டு செயலைநீயும் தொடங்கு”

என்னும் தத்துவத்திற்கமைவாக இப்பாடசாலையின் பிள்ளையார் சுழியாக பிள்ளையாரே அமைந்திருப்பதும் இப்பாடசாலையின் சிறப்பாகும்.

இந்த ஆலயம் மட்டுமன்றி இப்பாடசாலையின் தெற்குப்புறமாக அமைந்துள்ள காளிகோவில், முத்துமாரியம்மன் கோவில், சிவசக்திகோவில் என்பனவும். வடக்குப் புறமாக சித்திரவேலாயுதர் ஆலயமும் அமைந்துள்ளன. இது அன்னையர்கள் புடைசூழ அண்ணரும் தம்பியும் துணையிருக்க நடுநாயகமாக எமது பாடசாலை “சைவமும் தமிழும் தழைத்தோங்க” தெய்வ கடாட்சங்கள் நிறைந்த ஒரு கூடமாக அமைந்துவிட்டதையும் உணர்த்தி நிற்கின்றது.

“கோவிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்” என்ற ஔவை மூதாட்டியின் வாக்குப்படி எமது பாடசாலையைச் சுற்றிவர ஆலயங்கள் அமைந்து எமது மாணவரின் சிறப்புக்கள் யாவற்றிற்கும் திலகமாக விளங்குகின்றது. இறைவழிபாடு, கல்வி ஆகியவற்றின் மூலமே மனிதன் மனிதனாக வாழமுடியும். இந்தவழியில் இவையிரண்டும் இயற்கையிலேயே அமைந்து விளங்கும் இப்பாடசாலை எதிர்காலத்தில் சிறப்புற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை.

அண்மையில் கோப்பாய் கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு. வீரபத்திரர் அவர்கள் தனது உரையில் ஆலயமும், வித்தியாலயமும் இணைந்து இருப்பதால் கல்வியின் வளர்ச்சியில் சிறப்புறலாம் என்பதோடு வித்தியாலயமும் ஆலயமும் கல்வி, சமயம் இரண்டின் வளர்ச்சிக்கு கண்போன்று அமைந்துள்ளது என்றும் ஆலயம் வித்தியாலயத்துக்கும் வித்தியாலயம் ஆலயத்துக்கும் ஒன்றுக்கொன்று உறுதுணையாக இருக்கலாம் என்றும் கூறியமை நமது பாடசாலையின் சிறப்பினை மேலும் உறுதிப்படுத்துவதாகும்.

ஒன்றே செயினும் நன்றே செய்க

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை பவள விழா
குருக்கள் ஐயாவின் சிலை திறப்பு விழா
நன்றே நிகழ வாழ்த்துகிறோம்.

★ சைக்கிள் உதிரிப்பாகமா
விவசாய இரசாயனப் பொருட்களா
★ உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

# சபா விற்பனை நிலையம்

பிரதான வீதி,
அச்சுவேலி.

" அன்போடு இயைந்த வாழ்வே வாழ்வு
அருளொடு பொலிவோர் அருந்தவராவர் "

வித்தியாசாலைக்கு பவள விழா அதன்
வித்திட்ட குருக்களுக்குச் சிலை திறப்பு விழா

★ மாதற்கு அணிகலன் மங்காத
தங்க நகை உற்பத்திசெய்வோர்

# முருகன் ஆபரண மாளிகை

38, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.


பவள விழாக் காணும்

"அச்சுவேலி மெச்சும் புகழ் உயர்
சரஸ்வதி வித்தியாலயம் வாழ்க!

நிறுவனர்
ஸ்ரீலஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களின்
நாமம் ஓங்குக !!

ஐ (ஜ) ஜதி அரிசி ஆலை

பருத்தித்துறை வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி,



''தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தற்கு
கற்றனைத்து ஊறும் அறிவு''

பவளவிழா – நிறுவனர் நினைவுவிழா
குருக்கள் சிலை திறப்பு விழா
சிறப்புற வாழ்த்துகிறோம்.

சிறந்த வேலைப்பாடுள்ள தங்கநகைகளை
விரும்பும் டிசைன்களில் தெரிவு செய்ய

# ஈஸ்வரி நகை மாளிகை

177 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

பவள விழா சிறப்புற
வாழ்த்துகம் வம்மின் !

★ எல்லாவகைப் புடவை
★ சிறுவர் உடை
ஒருமுறை வாருங்களேன் !!

# நியூ சீகேபி

ரெக்ஸ்ரைல்ஸ்

74 பெரியகடை,
யாழ்ப்பாணம்.

---

பவள விழா சிறப்புற
நிகழ வாழ்த்துகிறோம்

★ கடைச்சலா யந்திரம்ஸ்!
★ ஒட்டு வேலையா
யந்திரம்ஸ் !
★ எதற்கும் யந்திரம்ஸ்!

# யந்திரம்ஸ்

வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலைக்கு
பவளவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்

★ விளம்பரப் பலகையா
விரும்பும் சித்திரங்களா

★ எத்தகு வர்ணவேலைகட்கும்
நாடுங்கள் எம்மை

# குணம் - இராசையா

(எழுதுனர்— வர்ணவித்தகர்)

பிரதான வீதி,
அச்சுவேலி.

பவள விழா சிறப்புற
நிகழ வாழ்த்துகிறோம்

★ சகலவித பட்டுப்
புடவைகட்கும்
நாடுங்கள்

## மகாராணி
## புடவை அகம்

பெரியகடை, யாழ்ப்பாணம்.

பவள விழா சிறப்புற
வாழ்துகம் வம்மின் !

பாடசாலைப் புத்தகங்கள் உபகரணங்கள்
மற்றும் அச்சுவேலைகட்கும்
றப்பர் சீல்களுக்கும

இன்றே நாடுங்கள்

## ஸ்ரீலங்கா
## புத்தக சாலையும்
## அச்சகமும்

234 கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம

உ

# முயற்சி திருவினையாக்கும்


**வி. கணேசமூர்த்தி**

*( பழைய மாணவர் சங்கத் தலைவர் )*


ஆலயமும் வித்தியாலயமும் ஒரு கிராமத்தின் இரு கண்கள் என்பர். அச்சுவேலி உலவிற்குளம் சித்திவிநாயகர் ஆலய மேலைவீதியில் புனிதமானதொரு சமயச்சூழலில் இன்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீலஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் பெருமானாரின் தனி மனித முயற்சியால் உருவானதே அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை.

ஆலவிருட்சமாகப் படர்ந்து இவ்வூரினதும் அயற்கிராமங்களினதும் மாணவர்கட்கு கல்விச் செல்வ நன்நிழலாய் அறிவுப்பயிர் வளர்த்த இவ் வித்தியாசாலை அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற காலத்தின் பின்னும் 18 ஆண்டுகளுக்கு மேல் அதிபராக இருந்து இப்பாடசாலையின் கல்விவளர்ச்சியை கண்ணிணைக்காக்கும் இமைபோலக் காத்தவருமான அமர அதிபர் திரு சி. மயில்வாகனம் ஆசிரியர் அவர்களின் சேவைக்காலத்தின் பின்னும் சிறிது வீழ்ச்சியடையநேர்ந்தது என்னவோ உண்மைதான். இதற்குக் காரணர்களாக இவ்வூர் மக்களாகிய நாமும் குறிப்பிடப்பட வேண்டியவர்களே. !

இவ்வூரிலுள்ள 90 வீதமானவர்கள் இப்பாடசாலையிலேயே தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றவர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. இன்று பெற்றோராகவும் உயர்ந்தபல உத்தியோகம் வகிப்பவர்களும் இப்பாடசாலையின் பழைய மாணவர்களே என்பது பெருமையான செய்தியாகும். ஆரம்பக் கல்வியை இப்பாடசாலையிலேயே தொடங்கி சிரேஷ்ட தராதரமும் ஆசிரியர் தராதரமும் பெற்ற ஆசிரியர்களாக இப்பாடசாலையிலே கடமையாற்றி இன்றி ஓய்வூதியம் பெறும் ஆசிரியர் கூட்டம் ஒரு பெருவட்டம்.

இத்தகு பெற்றோரும் கற்றபழைய மாணவர்களும் இப்பாடசாலையின் வீழ்ச்சியின் காரணத்தை ஆய்ந்து இப்பாடசாலையை முன்னேற்ற முயற்சி எடுக்காது எட்டத்தறிவித்த இறையாவாயமான இவ் வித்தியாலயத்தை விடுத்து '' இக்கரைக்கு அக்கரை பச்சை '' எனும் மாயைவயப்பட்டு தம் பிள்ளைகளை நகரப்பாடசாலைக்கு நகர்த்தி ஒருவகைக் கௌரவ நோக்கோடு இயங்கி வந்த - வருகின்ற நிலைப்பாடே இப்பாடசாலையின் வளர்ச்சியின் பாதிப்புக்குக் காரணம் என்றால் மறுப்பாருளரோ. ?

பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்புவதோடு தம்பணி முடிந்து விட்டது எனும் நோக்கில் தம் பிள்ளைகளின் கல்வி பற்றியோ பாடசாலைகளின் வளர்ச்சி – வசதிபற்றியோ சிந்திக்காது ஏனோதானோ எனும் போக்கிலிருந்த பெற்றோர்களின் அக்கறையீனத்தை அகற்ற இரண்டு வருடங்களுக்கு முன் இப்பாடசாலைக்கு அதிபராக வந்த திரு புண்ணியமூர்த்தி கதிரித்தம்பி அவர்கள் எடுத்த பெரு முயற்சியே இன்று இப்பாடசாலையில் பவள விழா நடைபெறுவதற்கு அத்திவாரமாக அமைந்தது என்றால் மிகையில்லை.

பெற்றோர்களைக் கூட்டினார் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தைப் பலப்படுத்தினார். பாடசாலை நிகழ்வுகளில் பெற்றோரையும் பங்காளிகளாக்கினார். '' குருக்களையா மனமுவந்து கட்டிய இவ் அறிவாலயம் உங்களுடையது நீங்கள் வழிகாட்டுங்கள் நான் செயற்படுகிறேன் '' என்று அறிவுரை கூறி பாடசாலையின் வளர்ச்சியில் பெற்றோர்களை அக்கறை எடுக்க வைத்தார். பாடசாலையின் வளர்ச்சியில் ஒரு வகை முன்னேற்றம் ஏற்படலாயிற்று. அதிபர் திரு கதிரித்தம்பி இப்பாடசாலையின் பழைய மாணவர்களை விட்டாரா - ? தேடிப்பிடித்தார் ஓர் பாடசாலையின் வளர்ச்சிக்கு பழைய மாணவர் சங்கம் உறுதுணையானது என்பதை பழைய மாணவர்களுக்கு ஊட்டினார். எழுபத்தைந்து வருடங்களின் பின் முதலாவது பழைய மாணவர் சங்கத்தை கூட்டுவதற்கு தானே அறிவித்தல் விடுத்தார்.

அன்று பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. சமுகங் கொடுத்த பழைய மாணவர்களோ ஒருகைவிரல்கள் மொத்தம் தான் என்பதை வேதனையுடன் சிந்திக்கின்றேன் அப்போதும் அவ் அதிபர் எம்மைப் பார்த்து ' சோர்வடையாதீர்கள் கூடியவர்கள் கொஞ்சமானாலும் நெஞ்சத்தில் உறுதி எடுங்கள் முயற்சி திருவினையாக்கும் என்பதை மறவாதீர்கள் " என எமக்கு உணர்வூட்டி ஒரு செயற்குழுவையும் அமைத்தார். இதன் பின்பும் ஈழை இருமலோடு இயங்கி வந்த பழைய மாணவர் சங்கம் 1992 — 1993 ல் இப்பாடசாலையால் - பாடசாலை அபிவிருத்திச் சபையினால் நிகழ்த்தப்பட்ட நிறுவனர் நினைவு நாள், பரிசளிப்புவிழா

போன்றவற்றிற்கு உடலூக்கமும், சிறுபொருளுக் கமும் கொடுத்துதவ முடிந்தது.

1994 ம் ஆண்டு தைத்திங்கள் ( ஜனவரி ) 1 திகதி தற்போதைய அதிபர் திருமதி சகுந்தலாதேவி கனகராஜா அவர்கள் முன்னைய அதிபரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டத்தை கூட்டினார். கணிசமான மாணவர்கள் கூடினர். பலமான செயற் குழுவும் ஆலோசகர்களும் தெரிவானார்கள். இப் பொதுக் கூட்டத்தில் இப் பாடசாலையின் பவள விழாவைக் கொண்டாடுவதோடு தனிமனித சக்தியாக தன்பொருள் கொண்டு எழுபத்லைந்து வருடங்களுக்கு முன் இப் பெரும் கல்வி விருட்சத்துக்கு வித்திட்டவரான சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் ஐயாவின் திருவுருவச் சிலையை இப் பாடசாலை வளவினுள் நிறுவி நன்றிக்கடன் செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

விழா எடுப்பதென்றால் நிதியும் வேண்டுமல்லவா? சிந்தித்தோம். இவ்வூர் மக்களினது இல்லங்கள் தோறும் சென்று நிதி சேர்ப்பது என்று முடிவு செய்தோம். அதிபர் திருமதி ச. கனகராஜா " முயற்சியெடுங்கள் வெற்றி பெறுவீர்கள் " என்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்; அபிவிருத்திச் சபையும் ஆசிரியர்களும் உறுதுணை செய்வார்கள் என்று கூறி ஊக்கமளித்தார். முயற்சித்தோம் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளோம்.

இவ்வூரிலுள்ள சகலரது இல்லங்களுக்கும் சென்றோம் - யாசித்தோம் இன்முகத்தோடு காசுகள் தந்தனர் - பெருநிதி தந்தனர் - நல்ல முயற்சி என்றும் பாராட்டினர் - சிலர் ஏளனம் செய்தனர் போற்றட்டும் தூற்றட்டும் புகழ் எமக்கல்ல இவ்வூருக்கே சிறப்பென்றெண்ணி முயற்சித்தோம். முயற்சி திருவினையானது. இன்று குருக்களின் சிலையையும் பவள விழாவையையும் காணுகிறோம்.

இவ் விழாவுக்கு பலவகையிலும் ஒத்துழைத்த சகலருக்கும் எமது நன்றிகள்.

பழைய மாணவர்களே பழைய மாணவர் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேருங்கள் தாய்ப் பாடசாலையின் வளர்ச்சியில் பங்காளியாகுங்கள் குருக்கள் ஐயா கண்ட கனவு நனவாகட்டும். கல்வியே அருமக்கள் கண்ணாகட்டும் கல்விச் செல்வத்தில் அச்சுவேலி உயர்ந்து நிக்கட்டும்.


யா / அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் பவள விழாவின் நிறைவினை கொண்டாடும் இவ் வேளையில் அதனை வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

பதிவு இல : J/1805 பதிவு திகதி : 13 - 10 - 86

கூட்டுறவுக் கேற்ப எமது சேவைகள்

1, அங்கத்தவர் சேமிப்பு
2, அங்கத்தவர் அல்லாதோர் சேமிப்பு
3, மாணவர் சேமிப்பு
4, பல வகையான கடன் திட்டங்கள்
5, கல்வி விஸ்தரிப்பு

காட்டுமலைக் கந்தன்

மகளீர் சி. க. கூ. சங்கம்

அச்சுவேலி.

உ

சிவமயம்

# யா / அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் வரலாறு

— திருமதி க. இராசலிங்கம்
( பகுதித்தலைவர் — யா / அ. ச. வித்தியாசாலை )

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு ஊன்றுகோலாயிருப்பது கல்வி எல்லாச் செல்வங்களிலும் சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும் இக் கல்வியை வளர்த்து வரும் வித்தியாலயங்கள் தேவாலயங்களுக்கு இணையானவையென்று கூறின் மிகையாகாது.

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகு மழகல்ல — நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே அழகு.

என்னும் நாலடியார் பாடல் கல்வி யழகே எல்லாவற்றிலும் சிறந்த தென்பதை வலியுறுத்துகிறது.

## வித்தியாசாலையின் ஆரம்பமும் வளர்ச்சியும் :

பல்வகைச் சிறப்புக்களும் நிறைந்த யாழ் மாவட்டத்திலே. அச்சுவேலி எனும் பதியிலே, உலவிற்குள சித்தி விநாயகர் ஆலய மேற்கு வீதியில் அமைந்திருப்பதே அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையாகும். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலே சைவமும், தமிழும், நலிவடைந்திருக்கின்ற வேளையிலே சைவத்தையும், தமிழையும் அழியாது பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கோடு அச்சுவேலியில் வாழ்ந்த ஆதிசைவ அந்தணர் வருணத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதே சரஸ்வதி வித்தியாசாலையாகும்.

குருக்களவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றி சைவ வித்தியாசாலை ஒன்று ஸ்தாபித்து நடாத்தி வரவேண்டும் என்று பெருவிருப்புக் கொண்டார். அந்த விருப்பு உலவிற்குள சித்திவிநாயகர் அருளினால் விரைவில் நிறைவேறியது.

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் உலவிற்குள விநாயகரை மனதில் இருத்தி பூசைசெய்த தவப்பேற்றினால் அவரின் திருவருள் கைகூட காலயுத்தி வருடம் ( கி பி 1918 ல் ) சித்திரைத் திங்களில் புனர்பூச நட்சத்திரத்தில் இப் பாடசாலையை ஆரம்பித்தார். பாடசாலைக்கு சரஸ்வதி வித்தியாசாலை எனப் பெயர் சூட்டினார்.

இப் பாடசாலை பிள்ளையார் கோவில் மேற்கு வீதியில் குருக்களவர்களால் விலைக்குப் பெற்றுக் கொண்ட நிலத்தில் அமைத்த சிறு கட்டிடமொன்றில் ஆரம்பமானது. ஏறக்குறைய நூற்றைம்பது பிள்ளைகளையும் நான்கு உபாத்தியாயர்களையுமுடையதாய் ஆரம்பப்பாடசாலையாக நடைபெறத் தொடங்கியது. இவ் வித்தியாசாலை உதவி நன்கொடைப் பதிவு பெறுவதற்கு சில பெரியார்கள் சகல உதவிகளையும் பெற்றுக் கொடுத்தார்கள்.

அக் காலத்தில் பாடவிகித நன்கொடையைப் பாடசாலைகட்கு அரசினர் அளித்தமையினால் குருக்களவர்கள் தாம் பரிபாலகராயிருந்ததோடு கி. பி 1918 தொடக்கம் கி. பி 1928 வரை வித்தியாசாலை முன்னேற்றங் கருதி ஆசிரியராகவுமிருந்து கடமையாற்றினார்கள். வித்தியாபகுதி கி. பி 1928 ம் ஆண்டின் மேல் ஆசிரியர்களுக்குச் சம்பளத்திட்டம் வகுத்தது. குருக்களவர்கள் இதற்குப் பின் பாடசாலையிற் படிப்பித்தலை நிறுத்திக் கொண்டு நூல்களெழுதி வெளியிடத் தொடங்கினார்.

கி. பி 1918 ல் ஆரம்ப பாடசாலையாக ஆரம்பித்த சரஸ்வதி வித்தியாசாலை கி. பி 1933 ம் ஆண்டு கனிஷ்ட பத்திர வகுப்புக்களையும் கொண்ட பாடசாலையாக வளர்ச்சியடைந்தது. தமிழ்மொழி மூலம் பாடசாலையாகவும், சைவத்தின் பாதுகாப்பிடமாகவும் இது விளங்கியது. இதன் வளர்ச்சிக்கு குருக்கள் அவர்களின் அயராத முயற்சியும், உலவிற்குள சித்திவிநாயகரின் அருளுமே காரணமாகும். இப் பாடசாலை கி. பி, 1960 ல் அரசினால் பொறுப்பேற்கப்பட்டது. இதன் பின்னர் இது ஓர் அரசினர் பாடசாலையாக செயற்பட்டு வருகின்றது. அரசினர் பாடசாலையாகச் செயற்பட்டு வருங்காலத்தில் இடைக்காட்டைச் சேர்ந்த திரு சி. ஆறுமுகம் அவர்கள் அதிபராக இருக்கின்ற காலத்தில் (கி. பி 1973 - 1978) தற்போது பாடசாலையின் அலுவலகமாக இயங்கிவரும் கட்டிடம் அரசினர் உதவியுடன் அமைக்கப்பட்டது. பாடசாலையின் மேற்கு எல்லையில் அமைந்த வகுப்பறைக் கட்டிடம் அதிபர் திரு ஏ. விக்கினேஸ்வரராஜா காலத்தில் அமைக்கப்பட்டதாகும்.

**மாணவர்கள் :**

ஊரின் நடுவில் சைவத்தின் இருப்பிடமாய் இப் பாடசாலை அமைந்திருப்பதனால் அச்சுவேலிக் கிராமமும், அதனைச் சூழ்ந்து இருக்கும் அயற்கிராமங்களிலுமுள்ள மாணவரில் பெரும் பாலானோர் இங்கு ஆரம்பக் கல்வியைக் கற்றுள்ளனர். இங்கு ஆரம்பக்கல்வியைக் கற்ற எத்தனையோ மாணவர்கள் இன்று நல்ல உயர்பதவிகளில் இருப்பதைக் காண முடிகிறது. இவ் வித்தியாசாலையில் தொடர்ச்சியாகக் கல்வி கற்று சிரேஷ்ட உயர்வகுப்புச் சித்தியடைந்த மாணவர்களும் நல்ல நிலையில் உள்ளனர். தற்போது நகரப் பாடசாலை மோகங் கொண்ட மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைக்குச் செல்வதால் இங்கு வசதிகுறைந்த ஏழை மாணவர்களே கல்வி கற்கின்றனர். கி பி 1960 ம் ஆண்டளவில் ஏறக்குறைய அறுநூறு மாணவர்களைக் கொண்டதாய் விளங்கிய பாடசாலை தற்போது முந்நூற்றுஇருபத்தைந்து மாணவர்கள் அளவில் கற்கும் பாடசாலையாக உள்ளது காரணம் வசதி படைத்த மாணவர்களின் நகர்ப்புறப் பாடசாலை மோகமேயாகும். ஆயினும் இங்கு கல்வி கற்கும் ஏழை மாணவர்களுக்குக் கல்வி வசதி அளித்துக் கைதூக்கி விடுவதில் சரஸ்வதி வித்தியாசாலை சிறந்த பணியாற்றி வருகின்றது. அமரகவி, சுப்பிரமணியப் பாரதியாரும் ஏழைகளுக்கு எழுத்தறிவித்தலின் பயன்பற்றிப் பின்வருமாறு பாடியிருக்கின்றார்.

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் தனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்.

க. பொ த. ப (சா/த) பரீட்சையில் காலத்துக்குக்காலம் ஏறக்குறைய ஐந்து மாணவர்களுக்குக் குறையாது சித்தியடைந்து வருகின்றனர் இவர்கள் க. பொ. த. ப. (உ/த) வகுப்புக் கற்பதற்கும் தகுதி பெற்றுள்ளன. மிகவும் வசதி குறைந்த மாணவர்களுக்குக் கல்வி புகட்டி அவர்களை மேலோங்கச் செய்வதன் பெருமை இவ் வித்தியாசாலை அதிபரையும், ஆசிரியர்களையுமே சாரும். நீண்டகாலமாக 5 ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் கிடைக்கவில்லையே என்ற மனக்கவலையை 1991 ல் செல்வி ந. சர்மளா, செல்வி ஆ. தக்ஷாயினி ஆகிய இரு மாணவிகளும் சித்தியடைந்து போக்கியுள்ளனர். இது வித்தியாசாலைக்குப் பெருமையைத் தேடிக்கொடுப்பதாக உள்ளது. கொழும்பு விவேகானந்த சமய பாடப்பரீட்சையில் தங்கப் பதக்கமும் பரிசில்களும் பெற்றது இப் பாடசாலையின் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் வித்தியாசாலை மாணவர்கள் நகர்ப் புற மாணவர்களிலும் திறமை மிக்கவர் என்பதை அண்மைக் காலத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள் நிரூபித்துவிட்டனர். கி. பி. 1992 ல் ஆண்கள் உடற்பயிற்சிப் போட்டியில் (13 வயதுக்குட்பட்ட) கோட்ட மட்டத்தில் 1 ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. அது மட்டுமன்றி, கி. பி 1994 ல் அண்மையில நடைபெற்ற 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான உடற்பயிற்சிப்

போட்டியில் கோட்ட மட்டத்தில் 1 ம் இடத்தைப் பெற்று, வலய போட்டியில் தெரிவு செய்யப்பட்டு மாவட்டப் போட்டிக்கும் சென்றுள்ளது. இது எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டாகும். இது மட்டுமன்றி, மாணவர்கள் தமிழ்த்தின விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கு பற்றி, பாடசாலை மட்ட, கொத்தணி மட்ட, கோட்ட மட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்டுப் பராட்டப்பட்டுள்ளார்கள். ஆங்கிலத் தின, பண்ணிசைப் போட்டிகளிலும் பங்கு பற்றி கொத்தணி மட்டங்களில் 1 ம் இடங்களைப் பெற்று கோட்ட மட்டப் போட்டிக்குச் சென்றுள்ளார்கள். இவ்விதம் பாடசாலைகளில் நடைபெறும் போட்டிகளில் மாணவரை ஈடுபடச் செய்து அவர்களைக் கொத்தணி, கோட்ட, மாவட்டப் போட்டிகளுக்குத் தயார்படுத்தி, வெற்றி பெறச் செய்த பெருமை பாடசாலை ஆசிரியர்களுக்கும், அதிபருக்குமேயாகும்.

**சங்கங்கள் :**

இப்பாடசலை நிதி வளங் குறைந்த ஒரு பாடசாலையாக இருந்தும், இப்பாடசாலையின் சங்கங்களின் ஒத்துழைப்பினால் வளர்ச்சியடைந்து வருகின்றது. இங்கு பாடசாலை அபிவிருத்திச்சங்கம், அபிவிருத்திச்சபை, பழைய மாணவர் சங்கம் ஆகிய சங்கங்கள் செத்ல்ப்பட்டு வருகின்றன. பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சபை, அபிவிருத்திச் சங்கம் என்பன அண்மைக் காலத்தில் பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டு வருகின்றன. இது பாராட்டப் படவேண்டியதொன்றாகும்.

**அதிபர்கள் ;**

இவ்வித்தியாசாலை ஆரம்பித்த காலம் முதல் இன்றுவரை, ஏறக்குறையப் பத்து அதிபர்கள் கடமையாற்றியுள்ளனர். அவர்களின் விபரம் பின்வருமாறு :

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திரு. | ச. செல்லையா | — | அச்சுவேலி |
| 2. | ,, | இ. செல்லையா | — | இடைக்காடு |
| 3. | ,, | நா. கந்தையா | — | இடைக்காடு |
| 4. | ,, | சி. மயில்வாகனம் | — | பத்தமேனி |
| 5. | ,, | சுப்பிரமணியம் | — | புலோலி |
| 6. | ,, | ஆ. சின்னத்துரை | — | இடைக்காடு |
| 7. | ,, | ஆ. காசிநாதர் | — | தோப்பாய் |
| 8. | ,, | சி. ஆறுமுகம் | — | இடைக்காடு |
| 9. | ,, | ஏ. விக்னேஸ்வரராசா | — | பத்தமேனி |
| 10. | ,, | பு. கதிரித்தம்பி | — | இடைக்காடு |

தற்போது இப் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றுபவர் தோப்பு அச்சுவேலியைச் சேர்ந்த, திருமதி. சகுந்தலாதேவி கனகராசா அவர்களாகும். அவரது அயரா முயற்சியினால், பாடசாலை முன்னேற்றமடைந்து வருவதை தற்போது அவதானிக்க முடிகிறது.

**ஆசிரியர் குழாம்**

இவ் வித்தியாசாலையில் அதிபர் உட்பட தற்போது பதினைந்து ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள். அவர்களின் விபரம் பின்வருமாறு ;

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருமதி. | ச. கனகராசா | — | அதிபர் |
| 2. | திரு. | சி. தங்கவேலு | — | பிரதி அதிபர் |
| 3. | திருமதி | க. இராசலிங்கம் | — | பகுதி தலைவர் |
| 4. | ,, | ந. ஞானலிங்கம் | — | உதவி ஆசிரியர் |
| 5. | திரு. | ம. ஞா. சேவியர் | — | ,, ,, |
| 6. | ,, | ந. தாமோதரன் | — | ,, ,, |
| 7. | ,, | இ. யோகநாதன் | — | ,, ,, |
| 8. | ,, | இ. க. பா. அருளானந்தம் | — | ,, ,, |
| 9. | செல்வி. | த. தெய்வமணி | — | ,, ,, |

10. திருமதி. கி. தருமரட்ணம் — உதவி ஆசிரியர்
11. செல்வி. சா. சந்திரலிங்கம் — ,, ,,
12. ,, மா. செல்வமணி — ,, ,,
13. திரு ந. ஸ்ரீமுருகதாஸ் — ,, ,,
14. செல்வி சி. பவானி — ,, ,,
15. ,, ப. ஜெயராணி — ,, ,,

**நிரந்தர வைப்பு நிதி :**

இவ் வித்தியாசாலைக்கென ஒரு நிரந்தர வைப்பு நிதி அபிவிருத்திச் சங்கத்தின் பெயரில் இலங்கை தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணக் கிளையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிரந்திர வைப்பு நிதிக்குக் கால் கோளாக இருந்தவர், இப்பாடசாலையின் முன்னை நாள் அதிபர் திரு. சி. மயில்வாகனத்தின் மகன் திருவாளர். ம. ஆலாலசுந்தரம் அவர்களாகும். இவர் பத்தமேனி, அச்சுவேலியைச் சேர்ந்தவர். தந்தையின் ஞாபகார்த்த நிதியாக ரூபா 5000 – 00 ஐ கி. பி. 1993 ல் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது அன்பளிப்புச் செய்துள்ளார். இது தற்போது நிரந்திர வைப்பு நிதியில் இடப்பட்டுள்ளது. எனவே இவ் வித்தியாசாலையில் வளர்ச்சிக்கு, ஒரு நிரந்தர வைப்பு நிதிக்கு முதன் முதலாக அன்பளிப்புச் செய்த பெருமை திருவாளர். ம ஆலாலசுந்தரம் அவர்களையே சாரும்.

**விழாக்கள் ;**

இவ் வித்தியாசாலையில் தமிழ்த்தின விழா, பரிசளிப்பு விழா. இலக்கிய விழா போன்ற விழாக்கள் காலத்துக்குக் காலம் நடைபெற்று வருகின்றன. சமய விழாக்கள், குருபூசைகள் எல்லாம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. அண்மைக் காலமாக, பரிசளிப்பு விழா மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வளர்ச்சிக்கு அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்தி சங்கம், அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்பும், ஊக்கமும் ஒரு காரணமாகும்.

**பவளவிழா :**

ஒரு கல்வி ஸ்தாபனம் உருவாக்கப்பட்டு, முக்கால் நூற்றாண்டு செவ்வனே இயங்கி முன்னேறி வருகின்றதென்றால் அதன் சரித்திரம் மிகவும் முக்கியமானதாகும். அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை ஸ்தாபிக்கப் பெற்று, எழுபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன எழுபத்தைந்து ஆண்டு நிறைவினையொட்டி, இந்த ஆண்டில் பவளவிழா ஒன்றினை எடுப்பதிலும், ஸ்தாபகர் சிலை அமைப்பதிலும் மகிழ்ச்சியடைகிறோம். 2 – 2 – 94 அன்று முன்னை நாள் அச்சுவேலி கொத்தணி அதிபர் திரு க சிவசுப்பிரமணியம் அவர்கள் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து சிற்பவிற்பன்னர் திரு ச துரைசிங்கம் ( சிங்கி ) அவர்களின் கைவண்ணத்தில் சிறப்புற அமைந்துள்ளது. அண்மையில் நடைபெற்ற பொது அறிவுப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம் பாடசாலை மாணவர்களுக்கு கிடைத்துள்ளது. பாடசாலைக்கான விளையாட்டு அரங்கும் சிறப்புற அமைந்துள்ளது. பவளவிழா இனிது நிறைவு பெற எல்லாம் வல்ல இறைவன் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

வாழ்க தமிழ்
வளர்க எமது வித்தியாசாலை

★

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

சரஸ்வதி வித்தியாசாலை பவளவிழா
சமயவித்தகர் குருக்கள் ஐயா சிலை
திறப்புவிழா சிறப்படைய வாழ்த்துகிறோம்!



★ கல்யாணக் கூறைகளா?
கணகவர் பட்டுப்புடவைகளா?

★ பட்டுவேட்டி, பாலர் உடைகள்
நாடுமிடம்

# அம்பாள் புடவை அகம்

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி,
புத்தூர்

---

பவளவிழா கண்ட
சரஸ்வதி வித்தியாசாலையை
வாழ்த்துகிறோம்.

★ தங்கப்பவுண்
நகைவியாபாரிகள்

★ தரம் உத்தரவாரம்

## இந்திரா நகையகம்

181, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

---

பவளவிழா
நிகழ்வதனை வாழ்த்துகிறோம்!

★ சகல புத்தகங்கள்
பாடசாலை உபகரணங்கள்
நாடுங்கள்

# பூபாலசிங்கம்

## புத்தகசாலை

யாழ்ப்பாணம்

''ஆக்கலும் அழித்தலும் சக்தி — எங்கள்
அகத்தில் நிறை பராசக்தி''



சரஸ்வதி வித்தியாசாலை பவளவிழா
சமயவித்தகர் குருக்கள் ஐயா சிலை
திறப்புவிழா சிறப்படைய வாழ்த்துகிறோம்!

அக்கா! என்ன என் நகைகளையோ பார்க்கிறீர்கள்
இவை சுத்தமான 22 கரட் தங்க நகை
யார் செய்தது என்று கேட்கிறீர்களா?
நீங்கள் செல்ல வேண்டிய நகைமாளிகை

# ஓம்சக்தி நகை மாளிகை

93 டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

---

பவளவிழா
நிகழ்வதனை வாழ்த்துகிறோம்!

அழகிற் சிறந்த
தங்க நகைகளுக்கு
தகுந்த இடம்

# ராதா

## நகை மாளிகை

244, பிரதான வீதி,
பருத்தித்துறை

---

பவளவிழா கண்ட
சரஸ்வதி வித்தியாசாலையை
வாழ்த்துகிறோம்.

★ மங்கையர் அழகு சாதனமா?


★ பாடசாலை உபகரணங்களா?

எங்களிடம் வாருங்கள்

## விநாயகர் ஸ்தாபனம்

19, யாழ் - பருத்தித்துறை வீதி,
புத்தூர்

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலைக்கு
பவளவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்



பவளவிழா - நிறுவனர் நினைவுவிழா
குருக்கள் சிலை திறப்பு விழா
சிறப்புற வாழ்த்துகிறோம்.

தங்க நகைகளின் தரம் எங்களது!
உங்களது திருப்தி ஆனந்தாவின் மகிழ்ச்சி!!

# நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

பவள விழா சிறப்புற
நிகழ வாழ்த்துகிறோம்

பருத்தித்துறையில்
தங்க நகைகட்கு
நாடுங்கள் எம்மை

## சிவகௌரி

## நகை மாளிகை

பிரதான வீதி பருத்தித்துறை

---

பவள விழா சிறப்புற
வாழ்த்துகும் வம்மின்!

0 நவின அழகிய
தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

## ★ வினோ ★

## நகை மாளிகை

தங்கபபவுண் நகை வியாபாரம்

பிரதான வீதி,
பருத்தித்துறை.

" கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே "

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை பவளவிழா
நிறுவனர்
சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள்
சிலை திறப்பு விழா சிறப்புற வாழ்த்துகிறோம்.

கறுப்பு வெள்ளை—கலர் படங்களுக்கு இன்றே நாடுங்கள்



★ புகைப் படத்துறையில்
புதுமை காட்டிடும்

# "ராஜன்ஸ்"



உங்கள் தேவையே எங்கள் சேவை

## ராஜன்ஸ் புகைப்பட நிலையம்

யாழ்ப்பாணம் வீதி,
அச்சுவேலி.

"நல்லவர் கூடினால் நன்மைக்குறையோ?"

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
பவளவிழாவுக்கு எம் வாழ்த்துக்கள்!

★ திருமணவிழாவா? புதுவருடக் கொண்டாட்டமா?
புத்தாடை கட்டிமகிழ—இன்றே விஜயம் செய்யுங்கள்

# மங்கை
# பட்டுப் புடவை அகம்

(மங்கை சில்க்ஸ்)

இல. 8. புதிய சந்தை,
சுன்னாகம்.

"கல்தேயும் சொல் தேயாது"

சரஸ்வதி வித்தியாசாலை
பவளவிழாவை வாழ்த்துகிறோம்.

சைக்கிள் உதிரிப்பாக
வியாபாரிகள்

## பானு ஸ்ரோர்ஸ்

11, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்

பவளவிழா நிகழ்வை
வாழ்த்துகிறோம்

## புகழ் ஸ்ரோர்ஸ்

( பலசரக்கு வியாபாரம் )

கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை பவள விழா
குருக்கள் சிலை திறப்புவிழா இனிதே நிகழ
வாழ்த்துகிறோம்.

★ முகூர்த்தப் பட்டுப் புடவைகள்
★ கூறைச் சேலைகள்
★ பட்டு வேட்டி
★ மற்றும் புடவைத் தினுசுகளுக்கும்
★ பிரசித்தி பெற்றவர்கள்.

# லிங்கம் பட்டு அகம்

18, நவீனசந்தை; 21, மேல்மாடி நவீனசந்தை
யாழ்ப்பாணம்.

"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு"

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை பவள விழா
குருக்கள் ஐயாவின் சிலை திறப்புவிழா
சிறப்புற வாழ்த்துகிறோம்.

# குகன் தனியார் கல்வி நிறுவனம்

ஆவரங்கால்,
புத்தூர்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை பவள விழாவும்
ஞானபண்டிதன் - நல்லறிவந்தணாளன்
சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்களின்
சிலை திறப்பு விழாவும்
சிறப்புற நன்றே என்று வாழ்த்துகிறோம்.

★ உடல்நோய் தீர்க்கும் மருந்துகள் எம்மிடம்!
உளநோய் தீர்க்கும் மருந்து இறைவனிடம்!!


# சூரியா மருந்தகம்

பிரதான வீதி,
புத்தூர்.

திருவருள் இருக்க தீங்கு வராது!

★ உங்கள் மழலைச்
செல்வங்களின்
உயிரோவியமான
நிழல் படஙகளுக்கு

# பேபி
# போட்டோ



பலாலி வீதி, திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்

பவள விழாவுக்கு
எமது வாழ்த்துக்கள்

— தங்க வைர நகைகளுக்கு
ஜெயாஸ்

ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
செய்து கொடுப்பவர்கள்

# ஜெயாஸ்
## நகை மாளிகை

443, பிரதான வீதி,
பருத்தித்துறை.

பவள விழா இனிது நிறைவுபெற
வாழ்த்துகிறோம்.

★ அழகு தரும்

★ தங்க நகைகளுக்கு

★ சிறந்த ஸ்தாபனம்

# அம்பிகை
## நகை மாளிகை

பிரதான வீதி,
பருத்தித்துறை.

# ஈழத்துச் சைவத்தமிழ் வரலாற்று மரபும் - கல்வியும்

**மா. ஞானலிங்கம்**
(போதனாசிரியர், தொலைக்கல்வி-ஆசிரியர் பயிற்சித்துறை)

ஈழத்து சைவத்தமிழ் மரபு வரலாற்றுத் தொன்மை மிக்கது திராவிடத்தின் வழித்தோன்றலும் சிறந்த சிவபக்தனுமாகிய இராவணனின் ஆட்சியால் மாட்சி பெற்று விளங்கியது. ஈழம் சிவபூமியாகத் திகழ்ந்தது. இதனை புரான இதிகாசக் கதைகளும் தேவாரத் திருப்பாடல்களும் புலப்படுத்தி நிற்கின்றன. வட இந்தியாவில் பௌத்த மதச் சிந்தனைகள் நிலைபெற்று கி. மு. 3 ம் நூற்றாண்டில் அசோகச் சக்கரவர்த்தியின் மகன் மகிந்தனால் ஈழத்துக்கு தேவநம்பியதீசன் ( கி. மு. 259 — 210 ) காலத்தில் எடுத்து வரப்பட்டது. பௌத்த மதம் பரவுவதற்கு முன்பே சைவமதம் ஈழத்தில் நிலைபெற்றிருந்தது. என்பதை காலத்தால் முந்திய பிராமிச் சாசனங்களும் வேறு பல தொல் பொருட்சான்றுகளும், இலக்கிய மூலகங்களும் சான்று பகர்கின்றன. " விஜயன் பிறப்பதற்குப் பல ஆண்டுகள் நூற்றாண்டுகளுக்கு முன்னரே வட இலங்கையில் குடியிருப்புக்கள் விருத்தி பெற்றிருந்தன " என அறிஞர் சேர் பேஸ் பீரிஸ் கூறுகிறார்.

பௌத்த மதம் அரசமதமாக மாறிய பின்னரும் சைவம் தொடர்ந்து மக்களால் அனுட்டிக்கப்பட்டு வந்தது. பௌத்த சைவமரபுகள் பரஸ்பர தொடர்பு கொண்டிருந்தன. சைவ பௌத்த மதங்களின் வளர்ச்சிக்கு இரண்டு சமயத்தைச் சேர்ந்தவர்களுமே மாறி, மாறி உதவினர். இதனைப் பாளி மொழியிலுள்ள தேரவாத பௌத்தம் சார்பான மகாவம்சம் போன்ற நூல்களும் கூறிச் செல்கின்றன. மகாசேனன் போன்ற சிங்கள மன்னர் சிலர் சைறத்தை அழிக்க முற்பட்ட போதிலும் மானவர்மன், விஜயபாகு, 1 ம் பராக்கிரமபாகு, 6 ம் பராக்கிரமபாகு, 1 ம் இராசசிங்கன் போன்ற சிங்கள மன்னர்கள் சைவமதத்தின் வளர்ச்சிக்கான பணிகளில் ஈடுபட்டமை கவனிக்கற்பாலன.

ஈழத்தின் எல்லாத் திசையிலும் சைவம் எழுச்சி பெற்றிருந்தது. சமஸ்கிருதத்திலுள்ள ஸ்கந்தபுராணத்தின் ஒருபகுதியாகக் கருதப்படும் தஷிணகையால மஹாத்மீயம் ஈழத்தின் பல்வேறு இடங்களிலும் இருந்த ஆலயங்கள் பற்றி விபரிக்கின்றது. அது " ஈழத்தை இந்து மதத்தின் இருப்பிடம் " எனவும் " ஏனைய நாடுகளில் இருக்கும் திருத்தலங்களிலும் பார்க்க ஈழத்திலுள்ள திருத்தலங்கள் சிறந்தவை " எனவும் கூறுகின்றது. ஈழத்தின் புராதன சிவ தலங்களான திருகேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், கதிர்காமம் என்பன பற்றி விபரித்துக் கூறியுள்ளது.

தெனனிந்தியத் தமிழ் மன்னர்களின் ஆதிக்கம் ஈழத்தின் மீது காலத்துக்குக் காலம் தொடர்ந்து இருந்து வந்துள்ளது. கி. மு. 145 சோழ இளவரசன் எல்லாளன் ( கி, மு. 145 — 101 ) அசேலன் என்ற சிங்கள மன்னனை வென்று 44 ஆண்டுகள் ஈழத்தை ஆண்டதையும் கி. மு. 49 ல் இருந்து கி. மு. 29 வரை ஐந்து தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்ததையும் மகாவம்சம் கூறிச் செல்கின்றது. ஈழத்தின் பல பாகங்களிலும் ஆதித்திராவிட மக்கள் வாழ்ந்தனர். ஆதித்திராவிட மக்கள் சடலங்களைப் பெரும் தாழிகளில் இட்டு அடக்கம் செய்தனர். அத்தாழிகள் 1954 ல் புத்தளம் மறிச்சுக்கட்டியிலும் 1982 ல் யாழ் ஆனைக்கோட்டையிலும் 1984 ல் கிளிநொச்சி குஞ்சுப் பரந்தனிலும் கண்டெடுத்தமை நிரூபித்து நிற்கின்றன.

யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசனாக உக்கிரசிங்கன் இருந்த காலப்பகுதியில் ( கி. பி. 785 ) மாருதப்புரவல்லி தீர்த்த யாத்திரை மேற்கொண்டு கீரிமலைக்கு வந்ததாககவும் அவளைக் கடிமணஞ் செய்த உக்கிரசிங்கன் மாருதப்புரவல்லியின் துணையுடன் சோழ நாட்டிலிருந்து விக்கிரகங்களையும் பிராமணர்களையும் கொண்டு வந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலை அமைப்பித்தான். முதலாவது நல்லூர் கந்தசுவாமி கோயில் நல்லூர் குருக்கள் வளவில் கி. பி. 948 ல் அமைக்கப்பட்டது. அது பின்னர் அந்நியரால் இடித்தழிக்கப்பட்டது ( தற்போதைய ஆலயம் நான்காவது ஆலயமாகும் )

யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் காலம் கி. பி. 13 ம் நூற்றாண்டில் ஆரம்பமாகியது சேதுகாவலர் என்ற பெயர் புனைந்து விடைக்கொடியும் சேதுவாஞ்சனையும் பொறித்து பரராசசேகரன், செகராசசேகரன் என ஒருவர் பின் ஒருவராக உலகம் போற்ற ஆட்சி செய்தனர். சிங்கைப்பரராசசேகரன் 1478 ல் முடிசூடிக் கொண்டதும் நல்லூர் இராசதானியை மத்தியாக வைத்து சட்டநாதர் கோயில் வீரகாளி அம்மன் ஆலயம், சந்தப்பிள்ளையார் ஆலயம், கையாலநாதர் ஆலயம் என்பவற்றை அமைத்ததுடன் நல்லூரில் தமிழ்ச்சங்கம் நிறுவி தமிழ் அறிஞர்களைக் கூட்டித் தமிழை ஆராய்ந்தான். ஆரியச் சக்கரவர்த்திகள் தமிழ் வடமொழிகளில் ஆற்றல் மிக்கவர்களாகவும் சோதிட சங்கீத அறிவு மிக்கவர்களாகவும் விளங்கியதுடன் பரராசசேகரம், செகராசசேகரம், செகராசசேகரமாலை முதலான வைத்திய

சோதிட நூல்களை உருவாக்கினர் சைவத்தையும் தாய்மொழியாகிய தமிழையும், இந்துப் பண்பாட்டு மொழியாகிய சமஸ்கிருதத்தையும், கலைகளையும் நன்கு போற்றினர். கி. பி. 1344 ல் வந்த வெளிநாட்டுப் பயணியாகிய இபின்பட்டுட்டாவின் குறிப்புக்கள் ஆரியச்சக்கரவர்த்திகளின் புலமையையும் பெருமையையும் வெளிக்காட்டி நிற்கின்றன. நயவஞ்சகக் சூழ்ச்சியால் போர்த்துக்கீசர் 1619 ல் கைப்பற்றும் வரை யாழ்ப்பாணத் தனியரசு நிலைபெற்றிருந்தது வன்னிராச்சியம் ல் போர்த்துக்கீசர் கைப்பற்றும் வரை தமிழரசாக இருந்தது. கண்டி இராச்சியம் 1815 ல் ஆங்கிலேயர் கைப்பற்றும் வரை தனியரசாக நின்று நிலைத்தது. கண்டி இராச்சியத்தின் கடைசி அரசன் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் தமிழன் என்பது மறைக்க முடியாத வரலாற்று உண்மை.

கி. பி. 1505 ல் போர்த்துக்கீசரின் வருகையுடன் உரோமன் கத்தோலிக்க மதம் ஈழத்தில் ஆட்சியாளர்களின் ஆதரவுடன் பரவத் தொடங்கியது. 1658 ல் ஒல்லாந்தரின் வருகையுடன் புரட்டஸ்தாந்து கிறீஸ்தவ மதம் நிலை பெறத் தொடங்கியது. (போர்த்துக்கேயர் — 1505 — 1658) (ஒல்லாந்தர் — 1658 — 1796) போர்த்துக்கேய — ஒல்லாந்த அரச ஆதரவுடன் சைவ ஆலயங்களை இடித்தழித்து கத்தோலிக்க கிறீஸ்தவ தேவாலயங்கள் கோட்டைகள் கட்டியெழுப்பப்பட்ட போதிலும் நலிவடைந்த சைவ சமயம் நீறுபூத்த நெருப்பாக மக்கள் மத்தியில் நிலை பெற்றிருந்தது.

ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்தில் (1796 — 1948) சைவநெறி மீண்டும் சுடர் விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியது. பௌத்த, கத்தோலிக்க கிறீஸ்தவ மதங்களுடன் போட்டி போட்டு சைவநெறி தனித்துவத்துடன் தலை நிமிர்ந்து நின்றது. சமய ஆசாரங்களைச் சுயாதீனமாக அனுட்டிக்கும் நிலை ஏற்பட்டது. மறைவிடங்கள் கொட்டில்கள் போலக் கிடந்த ஆலயங்கள் கட்டிடங்களாயின. ஆகமவிதிமுறைப் ஆலயங்களை அமைத்து மறைத்து வைத்த விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்து மக்கள் வழிபடும் நிலை ஏற்பட்டது. ஈழத்திற்கும் இந்தியாவுக்குமிடையே இருந்த சமய தொடர்புகள் சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கு மேலும் உதவியது. சுதந்திரத்திற்குப் பின் (1948) பௌத்த இனவாதக் கும்பல்கள் சைவத் தமிழ் மரபுகளுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளும் இனக்கலவரங்களின் போது சைவ ஆலயங்கள் பாடசாலைகள் திட்டமிட்டுச் சேதப் படுத்தப்பட்ட சம்பவங்களும் துரதிஷ்ட வசமானவை.

பண்டைய ஈழத்தில் நடைமுறையில் இருந்த கல்வி மரபு சைவத் தமிழ்க் கல்வி மரபு. அதனையடியொற்றியே பௌத்தக் கல்வி மரபு தோற்றம் பெற்றது அறிவு வழங்குதல், நல்லொழுங்கங்களையும் ஆத்மீகப் பண்புகளையும் விருத்தி செய்தல் ஆகிய நோக்கங்ளை நிறைவு செய்வதற்காக கல்வி போதிக்கப்பட்டது. குருகுருவின் வீடு, ஆலயங்கள் ஆகியன கல்வி பெறும் இடங்களாக இருந்தன. காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு கல்வி வழங்கப்பட்டது. போர்த்துக்கீச — ஒல்லாந்தர் ஆட்சியில் பண்டைய கல்வி மரபினை அடியொற்றி சமயக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் அரசியல் உறுதிப்பாட்டினை பேணுவதற்குமான கல்வி மதகுருமார்களாலும் மத நிறுவனங்களாலும் சுதேசிகளுக்கு வழங்கப்பட்டன.

கல்வியாலும் சமய அறவொழுக்கத்தாலும் மனித இனம் வளர்ச்சியடைந்து. மனித இனங்களின் கல்வி வரலாற்றில் சைவத் தமிழ்க் கல்வி மரபு தனித்துவமுடையது. அறநோக்கு, பொருள் நோக்கு, முருகியல் நோக்கு, விடுதலை நோக்கு ஆகியன ஒன்றிணைந்த சமநிலை வளர்ச்சியைப் பெற விழைந்தன. அறம், பொருள் இன்பம், வீடு, நான்கினையும் புருடார்த்தங்களாகக் கொண்டு அன்பு நாண் ஒப்பரவு, கண்ணோட்டம், வாய்மை ஐந்து சால்புகளை உள்ளடக்கிய சான்றோர்களை உருவாக்க முனைந்தது. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற திருமூலர் திருவாக்கினையும் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற சங்கத்தமிழ் மனித நேயத்தையும் உள்ளடக்கி மேம்பட்டது சைவத் தமிழ்க் கல்வி மரபு.

தேசிய ரீதியில் சைவத்தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு உழைத்தவர்களில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (1822 — 1879) சேர் பொன் இராமநாதன் (1851 — 1930) ஆகியோரின் பணிகள் அளவிடற்கரியன. நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் சைவத்தமிழ் மறுமலர்ச்சிக்கு தனிமனித நிறுவனமாக நின்று உழைத்தவர். சைவத்தையும், தமிழையும் பாதுகாக்க நாவலர் மேற்கொண்ட வழி கல்விவழி, சைவத்தையும தமிழையும் குருகுல முறையில் கற்றுத் தேர்ந்து யாழ் மத்திய கல்லூரியில் ஆங்கிலக் கல்வியைக் கற்றுணர்ந்த நாவலர் மரபு வழிவந்த சைவத்தழிக்கல்வியையும் ஆங்கிலக்கல்வியையும் இணைத்து புதிய கல்விமுறைக்கூடாக தமிழ்க்கல்வியை வளர்த்தார். சைவத்தமிழ்க்கல்வி மறுமலர்ச்சியின் முதல் நிலையமாக 1848 ல் வண்ணார்பண்ணையில சைவத்தமிழ் வித்தியாசாலையை நிறுவினார், அதன் அருகில் காவியப்பாடசாலையை அமைத்து நடாத்தினார். தொடர்ந்து இணுவில், கந்தர்மடம், கோப்பாய், கோண்டாவில், புலோலி, மூளாய், வேலணை, கொழும்புத்துறை, முல்லைத்தீவு முதலிய இடங்களில் சைவத்

தமிழ்ப் பாடசாலைகளை நிறுவினார். தமிழ் நாட்டில் சிதம்பரம், மாயவரம், வேதாரணியம் முதலிய இடங்களிலும் பாடசாலைகளைத் தாபித்தார்.

யாழ்ப்பாணம், சென்னை ஆகிய இடங்களில் அச்சுக்கூடங்களை நிறுவி சைவ - தமிழ் நூல்களையும் பாடநூல்களையும் வெளியிட்டதுடன் பழந்தமிழ் நூல்களைப் பரிசோதித்து வெளியிட்டார். 1872 ல் திருக்கேதீஸ்வரப் புணருத்தாரணம் தொடர்பாக நாவலர் விடுத்த வேண்டுகோளும் 1878 ல் வண்ணார்பண்ணையில் நடந்த வாதமகாசபையில் பிரசித்திபெற்ற மூத்த சட்ட நிபுணர் திரு பிறிற்றோவிற்குச் சார்பாக எடுக்கப்படவிருந்த தீர்மானத்தை மாற்றி சேர் பொன் இராமநாதனை சட்டசபையின் இலங்கைப்பிரதிநிதியாக தேர்ந்தெடுக்க வைத்த நாவலரின் வாதச் சிறப்பும் அவரின் சைவத்தமிழ்ப் பணிக்கு மகுடம் சூட்டி நிற்கின்றன.

நாவலரின் சமயப் பண்பாட்டு வாரிசுபோல் விளங்கிய சேர் பொன் இராமநாதன் ஈழத்தின் சைவத்தமிழ் வளர்ச்சிக்கு தனது உழைப்பினையும் உடைமைகளையும் வாரி வழங்கினார். ''கல்விக்குச் சமயம் அவசியம்'' என வலியுறுத்திக் கூறியதுடன் 1913-ல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியையும் 1921-ல் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியையும் நிறுவியதுடன் தமிழ்ப் பல்கலைக்கழகச் சிந்தனையையும் முதன் முதலில் நவின்றார். கொச்சிக்கடை பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தைத் திராவிட சிற்ப மரபுகளுக்கேற்ப கருங்கல்லால் நிறுவியதுடன் யாழ் பல்கலைக்கழக வளவிலுள்ள பரமேஸ்வரன் ஆலயத்தையும் அமைத்துதவினார்.

சைவத்தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு திட்டமிட்டு உதவிய நிறுவனங்கள் பல. அவற்றுள் சைவபரிபாலன சபை, சைவ வித்தியாவிருத்திச் சங்கம், இந்துபோட், கொழும்பு சைவ மங்கையர் சபை, விவேகானந்த சபை, யாழ் இந்துக்கல்லூரிகள் சபை என்பவற்றின் பணிகள் குறிப்பிடத்தக்கவை.

தமிழ்க்கிராமங்கள் தோறும் தனிமனிதர்களாக நின்று சைவத்தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு உழைத்தவர்கள் பலர். அவர்களில் இந்தப்பவள விழா மலரின் காரணகர்த்தாவாக விளங்கும் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்களின் (1886—1971) பணி நினைவுகூரத் தக்கது. 1911 முதல் 1915 வரை தமது இல்லத்தில் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் வகுப்புக்களை நடாத்திவந்த குருக்கள் 1918-ல் அச்சுவேலி உலவிற்குளம் பிள்ளையார் கோவிலின் மேற்கு வீதியில் பவள விழாக் காணும் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையை நிறுவி சைவத்தமிழ்க் கல்வி விருத்திக்கு தன்னாலான பங்களிப்பைச் செய்துள்ளார். அதேகாலப்பகுதியில் சோறன்பற்று, மருதங்கேணி ஆகிய இடங்களில் சரஸ்வதியின் பெயரில் வித்தியாசாலைகளை அமைத்து பின்தள்ளப்பட்ட கிராமங்களை கல்வியால் மேம்படுத்தியதுடன் வழிபாட்டிற்கு ஆலயங்களையும் அமைத்துதவினார். 7 ற்கு மேற்பட்ட சமஸ்கிருதநூல்களையும் 15 ற்கு மேற்பட்ட தமிழ் நூல்களையும் எழுதி சைவசமயக் கோட்பாடுகளையும் சமயக்கிரிகை விதிமுறைகளையும் தெளிவுபடுத்தியதுடன் சமய இலக்கிய நூல்களுக்கு உரைகளையும் எழுதியுள்ளார்.

அச்சுவேலி வடக்கு ஞானவயிரவர் கோயில் மருதங்கேணி பரமசிவகதிரேசன் கோயில் ஆகியவற்றை ஸ்தாபித்தார். அச்சுவேலி உலவிற்குளம் பிள்ளையார் கோயிலைத் தம் பொருள் கொண்டும் புணருத்தாரணம் செய்ததுடன் ஆலயத்தின் பிரதம குருவாக இருந்து அச்சுவேலியினதும் அயற்கிராமங்களினதும் சமய கல்வி மேம்பாட்டிற்கு உதவினார்.

பல்வேறு இடையூறுகளுக்கும் இன்னல்களுக்கும் மத்தியில் ஆலயத்திற்கருகில் அறிவாலயமும் அவற்றைச் சூழக் குடியிருப்புக்களும் அமைத்து சைவமும் தமிழும் அழகுற ஓங்கி உயர்ந்த ஈழத்துச் சைவத்தமிழ் மரபு கல்வியால் வீரத்தால் தலைநிமிர்ந்து உலகிற்கு வழிகாட்டி நிற்கின்றது.


'' அல்லவை தேய அறம் பெருகும் ''

— சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளர் —

க. செல்வநாயகம்

★ செல்வா ஸ்ரோர்ஸ் ★

பிரதான வீதி, ஆவரங்கால்

## ஈகை இசைபட வாழ்தல்

### விளையாட்டுத்திடல் அன்பளிப்பு

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலைக்கு
விளையாட்டுத்திடல் இல்லாத குறையை உணர்ந்த
ஈகை நெஞ்சுடைய — அச்சுவேலி தெற்கு,
திரு. ஆ. க. கந்தையா குடும்பத்தினரும்,
திரு. மா. செல்லத்துரை குடும்பத்தினரும்
வித்தியாசாலைக்கு முன்னுள்ள வயலை வாங்கி
அதை நன்கொடையாக ஈகை செய்துள்ளனர்.

இவர்களின் ஈகை மற்றவர்களுக்கும் வழிகாட்டட்டும்!

வாழ்த்துகிறோம் இவர்களை!


பவளவிழா சிறப்புற
வாழ்த்துகிறோம்

இரசாயனப் பொருட்கள்

சைக்கிள் உதிரிப்பாகங்கள்

மு. இராசையா

பிரதான வீதி,
அச்சுவேலி.

''குருவின் வாசகம் சிரமேற்கொள்''


பவள விழாவிற்கு எமது
வாழ்த்துக்கள்

கணேசன் புடவை மாளிகை

நவீன சந்தை,

சுன்னாகம்

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை பவள விழா
குருக்கள் சிலை திறப்புவிழா இனிதே நிகழ
வாழ்த்துகிறோம்.



வீடியோ படம் பிடிப்பதற்கும்,
அழகு வேலைப்பாடுகள் அமைந்த
**SMT** மணப்பந்தல் அமைத்திடவும்
நாடுங்கள்.

# வீரகலா ஒளி அருவி

★ கலர்ப் படங்கள், கறுப்பு வெள்ளைப் படங்கள்
எடுப்பதற்கு இன்றே நாடுங்கள்

# கலைவாசன் கலையருவி

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.


கிளை: டச்சு றோட்,
சாவகச்சேரி

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை பவள விழாவும்
ஞானபண்டிதன்—நல்லறிவந்தணாளன்
சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்களின்
சிலை திறப்பு விழாவும்
சிறப்புற நன்றே என்று வாழ்த்துகிறோம்.

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள வைபவங்
களை சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்துக்
கொள்ளவும், நவீன முறையில் சொக்
கட்டான் மணப்பந்தல் அமைத்திடவும்,
கண்கவர் வர்ணங்களில்
நிழற்படம் (போட்டோ) எடுக்கவும்
வெளிப்புறப் படப்பிடிப்பு செய்து கொள்
ளவும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

# சாயி



# ஒளி அருவி

பஸ் நிலையம்,
அச்சுவேலி

சாயி சாயி சாயி